
சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 5	இதழ்: 07	டிசம்பர் - 2023	விலை - ரூ.15/-
VOL:5	ISSUE: 07	DECEMBER - 2023	Rs. 15/-



"இறை ஞானி"
குணங்குடி மஸ்தான்

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.550/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"



* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.

* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-5 மலர்-07 டிசம்பர் - 2023

வெளியிடுபவர் / ஆசிரியர்

V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்

திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு

திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்

திருமதி. S.சாந்தி, சென்னை.

திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.

திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.

திரு. B.முருகன், சோழவந்தான்.

டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு

சிகரம் பப்ளிகேஷன்ஸ்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்

எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.

செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி



அன்பு குழந்தையே!

நீ எப்பொழுது என்னை பரிபூரணமாக நம்புகிறாயோ, அக்கணமே உனக்குப் பிடித்த வாழ்க்கையை நீ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் உனக்கு வழங்குவேன், அது எனது கடமை. இவைகளை பெறுவதற்கு சிறிது காலதாமதம் ஆகலாம், அதுவரை நீ காத்திருக்க வேண்டும்.

பொறுமையாக இருக்கவேண்டும் அவசர படக்கூடாது. நீ என்னை காண்பது அவ்வளவு எளிதல்ல. பலர் எனது வாயிலில் தவம் இருக்கிறார்கள்.

அப்படி பட்ட சூழ்நிலையில் நீ எதற்காக அவசர படுகிறாய், பாதுகப்பு வளையமாக உன்னைச் சுற்றி நான் இருக்கும் போது ஏன் இந்த பதட்டம்.

உன்னை பற்றி யார் எப்படி வேண்டும் ஆனாலும் பேசட்டும். எதை வேண்டும் ஆனாலும் செய்யட்டும். எதை பற்றியும் நீ கவலைபடாதே. நீ எதை செய்ய நினைத்தாலும் நீயாக செய். கூட்டு சேர்ந்து செய்ய முயற்சிக்காதே. உன்னுடைய உழைப்பு வீனாகிவிடும்.

முதலில் உன் மீது நம்பிக்கை வை. உன் மீது வைக்கிற நம்பிக்கையே என் மீது நீ வைக்கிற நம்பிக்கையாகும். இனி வரும் தருணத்தில் ஜெயிக்க போவது நீயாக இருப்பாய். என்னால் முடியும் என்று நம்பிக்கையோடு இரு, நிச்சயம் அது முடியும். காரணம், உன்னில் இருப்பது நீயல்ல, நான்!

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

ஆசிரியர் பக்கம்...



அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

பகவான் சாயிநாதரின் அருளால் அறுபத்து ஐந்தாவது இதழ் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 5.11.23 ஞாயிற்றுக்கிழமை காலை10 மணிக்கு சாய் தியானாலயா ஆத்மஞான பீடத்தில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, அயனாவரம், சென்னை 23) மிகச்சிறப்பாக நடைபெற்றது.

காலை 8 மணிக்கு ஆசிரியரின் சத்சங்கத்துடன் தொடங்கிய விழா தியானம், பஜனை எனத்தொடர்ந்தது.

காலை பத்து மணிக்கு இம்மாத இதழை பாராயணப்பகலவன் திரு.சுந்தர்சாய் அவர்கள் வெளியிட "அருட்பெரும்சோதி" திரு. இராஜசேகர் அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள்.

விழாவில் திரு.சுந்தர் சாய், திரு. இராஜசேகர், திரு. அகஸ்டின், திரு. உமாசங்கர், திரு. அய்யாகண். திரு. சுந்தரவேலு திரு. குமார். ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் "சாய் தியானாலயா" அன்னதானக்குழுவினர் அன்ன பிரசாதம் வழங்கினர். புத்தக வெளியீட்டை முன்னிட்டு இல்லாதோருக்கும், இயலாதோருக்கும் நேரில் சென்று அன்னதானம் வழங்கப்பட்டது.

நடந்து முடிந்த தீபாவளித் திருநாளை மகான்கள் வகுத்துத்தந்த





“தீப ஒளி” திருநாளாக கொண்டாடு வதை மறந்து, “ தீபாவளி” யாக கொண்டாடியதன் பலன், 20 ஆயிரம் கோடிக்கு துணி விற்பனை? 6 ஆயிரம் கோடிக்கு பட்டாசு விற்பனை? 467 கோடிக்கு மது விற்பனை? 315 கோடிக்கு கறிக்கோழி விற்பனை. விதிகளை மீறி பட்டாசு வெடித்ததாக தமிழகத்தில் 2095 நபர்கள் கைது, பட்டாசு விபத்தில் 635 பேர் காயம், 4 வயது சிறுமி உட்பட இருவர் பலி.

இது அரசு இயந்திரத்தின் ஆதாரப் பூர்வமான செய்தி! இதுதான் நாம் விழாக்கள் கொண்டாடுவதன் நோக்கமா? இன்றைய விழாக்கள், விழாக்களாக இல்லாமல், வீண் ஆடம்பர கொண்டாட்டங்களாகிப் போனதால் விளைந்த கேடுகள் இவை.



விழாக்களை கொண்டாட வேண்டாம் என்று சொல்லவில்லை. விழாக்களை உணர்ச்சிப்பூர்வமாக கொண்டாடுவதை விடுத்து உணர்வுப் பூர்வமாக கொண்டாடலாம் அல்லவா? நீங்கள் விழாக்களை கொண்டாடும் லட்சணம் உயிர்பலி வாங்கும் அளவிற்கல்லவா செல்கிறது.

இதுபோன்ற விசயங்களில்



"விழா"மல் இருப்பதுதான் "விழா" என்பதை எப்போது உணர்வார்கள் மக்கள் என்பது அவர்கள் கொண்டாடும் "விழா" நாயகர்களுக்கே வெளிச்சம்.

வாழும்போது பகவான் சாயிநாதர், தன்னை நாடிவந்த மக்களின் பிரட்சனைகளை தீர்த்து, அவர்களது முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்து, தனது பல பக்தர்களை பெரும் செல்வந்தர்களாக மாற்றிய பாபா கடைசிவரை எளிமையாக அல்லவா வாழ்ந்தார்.

அவர் கேட்டிருந்தால் யார் இல்லை என்று சொல்லியிருப்பார்கள். கொண்டு வந்து கொட்டியிருப்பார்களே ஆனால் தன்னைசுற்றி பல கோடீஸ்வரர்கள் இருந்தபோதும் அவர்களை வாழவைத்துப் பார்த்தாரே ஒழிய அவர்களால் பாபா ஒருபோதும் வாழவில்லை. அப்பேர்பட்ட பகவான் சாயிநாதரை ஏற்றுக்கொண்ட நாம் இம்மாதிரியான விழாக்களை எப்படி கொண்டாடினோம் என்று நினைவு கூறுங்கள்.

இனிவரும் விழாக்களையாவது தத்துவம் அறிந்து, தகாதவைகளை விடுத்து, எளிமையாக, இனிமையாக நாமும் கொண்டாடுவதோடு, விழா கொண்டாட முடியாதவர்களையும், கொண்டாட வைத்து கொண்டாடி மகிழ்வோம்.

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று, உலக மாந்தர்கள் அனைவரும் போர், பகை, அச்சமின்றி ஆரோக்கியத்துடனும், மனநிம்மதியுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கிறோம். மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்!
வாழ்க வையகம்!

– அன்புடன் ஆசிரியர்

ஓம் சாய்ராம்

வாழ்வை வளமாக்கும் இனிய சாயி லிகித ஜபம்

சாய் அன்பர்களுக்கு பணிவான வணக்கத்துடன்...

ப்ரபஞ்சத்தின் ஆற்றல்மிக்க சக்தி ஸ்வரூபனான நம் அன்பு சாய் மஹராஜ் க்ருபையினால் நமக்கு அளிக்கப்பட்ட திரு மந்த்ரமான,

"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்" என்ற

சக்தி வாய்ந்த லிகித நாம ஜபம் தினமும் 108 முறை யாவது மனம் ஒன்றி எழுதி நமது கர்ம வினைகளின் தாக்கத்தில் இருந்து, தற்காப்பு செய்து கொள்வதுடன், நமது அனைத்து காரியங்களிலும், பேரொளியாய் சாய்நாதர் வழி காட்டி, பரிபூரணமாய் நம்மை ஆசீர்வதிக்க ப்ரார்த்திப்போம் வாரீர்.



'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

தொடர் –65

குருவைத் தேடி

சிறிது நேரம் என்ன செய்வது என்று புரியாமல் அவர் நடந்து சென்ற திக்கையே பார்த்துக் கொண்டிருந்தேன் மூன்று நாட்களாகியும் சமாதி ஆலயத்திற்குள் சென்று பாபாவை தரிசிக்காமல் வெளியில் அமர்ந்திருக்கும் அகங்காரம் எனக்குப் புரிந்தது. உடனே அவ்விடத்தைவிட்டு எழுந்து கொண்டேன். என் பையை தூக்கிக்கொண்டு சமாதி ஆலயத்திற்குள் நுழைந்தேன். பைரவரும் என்னுடனே வந்தார்.



அன்று என்னவோ அவ்வளவாக கூட்டம் இல்லை. எனக்கு முன்னே பைரவர் செல்ல, நானும் அவருக்கு பின்னே செல்கிறேன். ஐந்து நிமிடம்தான் இருக்கும். நாங்கள் இருவரும் பகவான் சாயிநாதருக்கு முன்பாக நிற்கிறோம். தூரத்தில் வந்தபோதே சாயிநாதரின் பளிங்குச் சிலையைப் பார்த்துவிட்டேன். ஆனால் என்னவோ நிமிர்ந்து அவரை நேருக்கு நேர் பார்க்க எனக்கு தைரியம் வரவில்லை.

அருகில் வந்ததும் மெல்ல அவரின் பாதங்களில் இருந்து மேலே பார்க்கப் பார்க்க, அழுகை கட்டுப்படுத்த முடியாமல் கண்கள் கண்ணீரை கக்குகிறது. மனது துடித்து வெடித்து விடுவது போல் அலைபாய்கிறது. கைகால்கள் நடுங்குகிறது. சந்தன நிறத்தில் உயிரோட்டமான அவரது முகத்தை சற்றே நிமிர்ந்து பார்த்த அந்த தருணம் என் வாழ்வில் உன்னதமான ஒரே தருணம்.

கருணையான அந்த விழிகளை நோக்குகின்றேன். நான் பார்ப்பதற்கு முன்பாகவே அது என்னையே பார்த்துக் கொண்டிருந்ததாக உணர்கிறேன். அது ஒரு பளிங்குச் சிலைதான் என்பதை என் மனம் பகுத்தறிகின்றது. ஆனால் அந்தப் பகுத்தறிவையும் தாண்டி ஏதோ ஒன்று அங்கே நிகழ்ந்தது. ஆம் அந்தக் கண்கள் என்னிடம் பேசியது.

ஒரு சிலையில் அவ்வளவு உயிரோட்டம் இருக்குமா? என்

உடல் சிலிர்க்கின்றது. என்னைச்சுற்றி உள்ள உலகம் கண நேரத்தில் மறைந்து போனது. இப்போது சன்னதிக்குள் நானும் சாய்தேவரும் மட்டுமே இருக்கின்றோம். கருணையோடு என்னை நோக்கிய அந்த முகத்தில் இதழோரம் சிறிய புன்னகை.

அந்தப்பளிங்குச் சிலை சற்றே அசைகின்றது. கால்கள்மேல் உள்ள கைகள் மெல்ல மேலே உயர்ந்து என்னை ஆசீர்வதிப்பாய் காண்கிறேன்.

அந்த ஒரு விநாடி, எனக்குள் குடி கொண்டிருந்த அத்தனை தேடுதல்களும், கேள்விகளும் நின்று போயின.பதட்டமும், குழப்பமும் ஓடி ஒளிந்தன. மனம் ஆழ்ந்த அமைதியை உணர்ந்தது. ஏதோ இனம் புரியாத ஆனந்தம் எனைச்சூழ்ந்தது. ஆண்டாண்டு காலமாய் பிரிந்திருந்த என் உண்மையான உறவை

அடைந்ததாய் மனம் உவகை கொண்டது. என் அத்துணை ஏக்கங்களும் என்னைவிட்டு ஓடி மறைந்தது.

முடிவாய் என் "குருவை தேடி" அடைந்து விட்டேன். இதோ என் சற்குரு, எனது கர்மவினைகளை களைந்து என்னை அணைத்துக்கொண்டார். இந்த "பாவி"யை சற்குரு ஏற்றுக் கொண்டார். இனி எனக்கொன்றும் குறையில்லை. இந்த சென்மம் புனிதமடைந்தது என்று மனம் குதூகலித்தது.

குறைந்தது ஐந்து நிமிடங்களாவது கண்கொட்டாமல் சாயிநாதரையே பார்த்துக் கொண்டிருந்திருப்பேன். என் காதருகே "பயப்படாதே! நீ எங்கு வரவேண்டுமோ அங்கு வந்துவிட்டாய்! இனி நான் உன் வேலையைப் பார்த்துக் கொள்கிறேன். என்று கிசுகிசுத்தது. அப்படியானால் நான் என்ன செய்யவேண்டும் சாய்தேவா என்று என் மனம் கேள்வி எழுப்ப, நீ என் வேலையைப்பார்". என்று கிசுகிசுத்தது.

சட்டென்று ஒரு விநாடி கண்களை முடி திறக்கின்றேன். எல்லாம் மாறி விட்டது. என்னைச்சுற்றி பக்தர்கள் கூட்டம். காவலர்கள் சலோ, சலோ என்று பக்தர்களை வெளியே தள்ள, சமாதி பீடத்தில் இருந்த பூசாரி நீட்டிக் கொண்டிருந்த என்கைகளில் ஒரு பேடாவையும், சில பூக்களையும் வைக்கிறார். நான் அதை கண்களில் ஒத்திக்கொண்டு சாயிதேவரை பார்த்துக் கொண்டே வெளியே வருகிறேன்.

எனக்குமுன்னே வெளியே வந்த பைரவர் என்னுடன் சேர்ந்து கொள்ள நாங்கள் இருவரும் குருஸ்தானம் சென்றோம். மனம் மிகவும் லேசாக இருந்ததாய் உணர்ந்தேன். என் கவலைகள் எல்லாம் பறந்து போயின. உலகம் ஆனந்தமாகத் தெரிந்தது. மக்கள் ஆனந்தமாக இருப்பதாய் உணர்ந்தேன்.

"அசைவு ஆனந்தத்தை மறைக்கின்றது. அசைவை நிறுத்து ஆனந்தம் வெளிப்படும்" என்ற எனது பால்யகால குரு இராமாசாது அவர்களின் ஞான மொழிக்கு முப்பது வருடங்கள் கழித்து அப்போதுதான் எனக்கு அழுத்தமாய் அர்த்தம் புரிந்தது.

அர்த்தம் புரிந்தது என்பதைவிட ஆணவமலம் நிரம்பிய எனது கர்மவினையின் அழுக்குகள் சற்குருவின் பார்வை பட்டவுடன் சட்டென நீங்கியது என்பதை நான் அக்கணம் நன்குணர்ந்தேன்.

"சீரடி மண்ணை எவன் ஒருவன்

மிதிக்கின்றானோ, அவனுடைய துன்பங்கள் யாவும் முடிவடைந்து சௌகரியத்தை அடைவதை அவன் மனம் உணரும்" என்ற சாயிதேவனின் அமுத மொழியை பிற்பாடு நான் படித்துணர்ந்து வியந்து போனேன்.

"அதுமட்டுமல்ல, துவாரகாமாயியை அடைந்தவுடன் பெரும் துன்பத்திற்கு உள்ளானவர்களும் மிகுதியான சந்தோசத்தை அடைவார்கள்"

"இவ்வுலகை விட்ட பிறகும், நான் சர்வ சக்தியுடன் வேலை செய்து கொண்டே இருப்பேன்" "என்னுடைய பூத உடல் என் சமாதியில் இருந்து கொண்டே என் பக்தர்களிடம் பேசி ஆசீர்வதிக்கும்"

"என்னுடைய சமாதி என் பக்தர் களுக்கு அநேக ஆசீர்வாதங் களையும், புத்திமதிகளையும் கொடுக்கும்"

"என் சமாதியில் இருந்துகொண்டே, நான் மிகவும் சுறுசுறுப்பாகவும், தீவிரமாகவும் செயல்படுவேன்"

"என்னிடம் வருபவர்களும், என்னையே தஞ்சமாக சரணடைபவர்களுக்கும், என் உபதேசத்திற்காக, என்னிடம் தீவிர நம்பிக்கை உடையவர்களுக்கும் நான் எப்போதும் உயிருடன் இருக்கிறேன்"

" நீ என் பேரில் உன் சுமைகளை சுமத்தினால், நான் நிச்சயமாக அச்சுமையை சுமப்பேன்"

"நீ என் ஆதரவிற்காகவும், உதவிக்காகவும், வேண்டினால் அவற்றை உடனே நான் உனக்குக் கொடுப்பேன்".

" என்னுடைய பக்தர்களுடைய வீட்டில் ஒரு போதும் தேவை என்பதே இருக்காது. விருப்பங்கள் அனைத்தும் என்னால் நிறைவேற்றப்படும்". என்ற சாயிதேவரின் அமுத மொழிகளை பின்னாட்களில் அறிய நேர்ந்த போது அம்மொழிகள் எவ்வளவு சத்திய மொழிகள் என்பதை உணரமுடிந்தது. ஏனெனில் இம்மொழிகளை நான் படித்து அறிவதற்கு முன்பே, சீரடியில் அனுபவப்பூர்வமாக உணர்ந்து

கலியுகத்தின் கண்கண்ட கடவுள் பகவான் சாயிநாதரே என்பதையும் உணர்ந்து தெளிந்தேன்.

இருப்பினும், என் காதினில் கிசுகிசுத்த "என் வேலையைப்பார்" என்பதற்கு என்ன அர்த்தம். என்பது சற்று குழப்பியது. இருப்பினும் அப்போதைக்கு நான் அதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

ஒருவாறாக, குருவை அடைந்த மகா திருப்தியுடன் வெளியே வந்து போது சம்பந்தமே இல்லாத ஒரு நபர் என்னிடம் வந்து, நீங்கதானே ஸ்ரீராம். சென்னையில் இருந்து வருகின்றீர்கள் தானே என்று கேட்க, அவர் தமிழராக இருந்தும் அவரிடம் ஆமாம் என்று கூற சற்று தயங்கி நின்றேன். ஆனால் அவரோ, ஸ்ரீராம்பூர் சுகுமார் தான் அனுப்பினார். உங்கள்கூட சற்று பேச வேண்டும் என்றார்.

சீரடிக்கு அருகில் ஸ்ரீராம்பூர் என்ற ஊரில் தங்கியிருந்து எனக்கு உணவுப் பொருட்களை அனுப்பிவைக்கும் வியாபாரி சுகுமார் என்ற தமிழரை நான் அறிவேன். அவர் பத்து வருடத்திற்கு முன்பு என்னுடன் தொடர்பில் இருந்தவர்.

அப்போது நடந்த வியாபாரத்தில் எனக்கு அவர் பத்தாயிரம் பாக்கி தரவேண்டும். ஆனால் நான் அதை மறந்துவிட்டேன். தற்போது

எனக்கும் அவருக்கும் வியாபாரத் தொடர்பில்லை. எனவே சற்று யோசித்துவிட்டு, சுகுமார் எங்கே இருக்கிறார் என்றேன்.

அவர் சோலாப்பூரில் இருக்கிறார். உங்களிடம் இந்த கவரை கொடுக்கச்சொன்னார் என்று ஒரு கவரை என்னிடம் நீட்டினார். நான் சற்று தயங்க, அந்த மனிதரோ, அவர் உங்களுக்கு தர வேண்டிய தொகை இதில் இருக்கிறதாம். உங்களிடம் கொடுக்கச்சொல்லி என்னை அனுப்பினார் என்றார்.

நீங்கள் யார்? என்றேன் நான். சுகுமாரிடம் வேலை பார்க்கின்றேன் என்றார் அவர். எங்கே தங்கியிருக் கின்றீர்கள்? இங்குதான் பிம்பல்வாடி ரோட்டில் 18 ஆம் நம்பர் வீட்டில் தங்கியிருக்கின்றேன் என்றார் அவர், நான் மீண்டும், உங்களுக்கு என்னை எப்படித் தெரியும்? என்று கேட்க, அவரோ, சென்னைக்கு உங்கள் நிறுவ னத்திற்கு நானும் சுகுமாரும் வந்தபோது பார்த்திருக்கின்றேன். என்று கூற நான் நம்பிக்கையுடன் அந்தக் கவரை வாங்கிக்கொண்டேன்.

உடனே அந்த நபர், எனக்கு அவசரமாக வேலை இருக்கின்றது அஹமது நகர் வரை செல்லவேண்டும். நீங்கள் இங்குதானே தங்கியுள்ளீர்கள். இன்று மாலையில் வந்து என்னைப் பாருங்கள். பிம்பல்வாடி ரோடு, 18 ஆம் நம்பர் வீடு என்று கூறிவிட்டு வேகமாக செல்ல முயன்றார். நான் அவரிடம் உங்கள் பெயர் என்றேன். தட்சிணாமூர்த்தி என்று கூறிவிட்டு வேகமாகச் சென்றுவிட்டார்.

நான் அந்தக் கவரைப் பிரித்துப் பார்த்தேன். அதற்குள் 5000 ரூபாய்



இருந்தது. ஐந்து நாட்களுக்குப்பின் பணத்தைப் பார்க்கின்றேன். ஆனால் கடந்த ஐந்து நாட்களாக ஒரு ரூபாய் கூட இல்லாமல் வாழ்ந்து பழகிவிட்டேன். அதுவே இப்போது எனக்கு மிகவும் ஆனந்தமாக இருந்தது.

அதனால் நான் வாழ்க்கையின் லட்சியமாக எண்ணியிருந்த "பணம்" என் கையில் இருந்தும் என் மனதை அது சிறிதும் அசைக்கவில்லை.

மாலையில் பிம்பல்வாடி சென்று அந்த நபரை சந்திக்கவேண்டும் என்று சிந்தித்தவாறே, பணத்தை பையினுள் வைத்துக் கொண்டு, நான் எப்பொழும் வந்து அமரும் இடத்தில் சென்று அமர்ந்து கொண்டேன். பைரவரும் என்னுடன் வந்து அமர்ந்து கொண்டது.

எனக்கு பணம் தரவேண்டிய வியாபாரிக்கு என் நிலமையை எடுத்துக்கூறியும், அவர் சீரடிக்கு வந்து உங்களை சந்திக்கின்றேன்

என்று கூறினார். ஆனால் அவர் வந்து என்னை சந்திக்கவுமில்லை. பணமும் கொடுக்கவில்லை.ஆனால் எப்போதோ எனக்கு பணம் தரவேண்டிய வியாபாரி இப்போது பணம் கொடுத்து அனுப்பியிருக்கின்றார். அவருக்கு என் நிலைமை எப்படித் தெரியும். யார் கூறியிருப்பார்கள் என்று குழம்பியவாறே அமர்ந்திருந்தேன்.

மாலையில் பிம்பல்வாடி ரோடு சென்று அந்த மனிதரை சந்தித்தால் இந்த குழப்பத்திற்கு விடை தெரிந்துவிடும். அதுவரையில் என்ன செய்யலாம் என்று சிந்தித்தேன். கையில் பணம் இருக்கின்றது. கடைகளில் ஏதாவது தமிழ் புத்தகம் கிடைக்கின்றதா பார்க்கலாம் என்றவாறு எதிரில் இருந்த புத்தக கடைக்குச் சென்று பார்வையிட்டேன்.

வெகுநேரமாக தேடியும் தமிழ் புத்தகம் கிடைக்கவில்லை. கடைக்காரர் என்னிடம் என்ன வேண்டும் என்று கேட்டார். நான் தமிழ் புத்தகம் இருக்கின்றதா என்று கேட்டவுடன், எனக்கு பதில் கூறாமல் புத்தக அலமாரியில் கீழே அமர்ந்து புத்தகக் குவியலுக்குள் எதையோ தேடினார். சிறிது நேரத்தில் ஒரு பழைய புத்தகத்தை எடுத்து தூசி தட்டி, என்னிடம் எடுத்துவந்து கொடுத்தார்.

நான் அந்தப் புத்தகத்தை கைகளில் வாங்கிப்பார்த்தேன். அது ஆச்சார்யா பரத்வாஜா எழுதிய " ஸ்ரீ சாயியின் திருவிளையாடல்கள்" என்ற புத்தகம். மிகவும் பழையதாக இருந்தது. முன்பக்கமும், பின்பக்கமும் சில பக்கங்கள் கிழிந்திருந்தன.

ஆனாலும் நான் அதை ஆர்வத்தோடு வாங்கிக்கொண்டேன். புத்தகத்திற்கு கொடுப்பதற்காக பணத்தை எடுத்தேன். அந்தக் கடைக்காரர். வேண்டாம் என்று மறுத்துவிட்டார்.

நான் ஆச்சர்யத்தோடு, புத்தகத்தை வாங்கிக்கொண்டு, நான் அமரும் இடத்திற்கு வந்து படிக்க ஆரம்பித்தேன். படிக்கப்படிக்க நேரம் போனதே தெரியவில்லை. நான் படித்த முதல் சாயி புத்தகம் அது. ஆனால் படிக்கப்படிக்க, என் காதுகளில் கிசுகிசுத்த " என் வேலையைப்பார்" என்பதன் அர்த்தம் ஓரளவிற்கு எனக்கு விளங்க ஆரம்பித்தது.

ஆச்சார்யா பரத்வாஜ் அவர்களின் சேவையிலும், அவரது சாயி தத்துவத்திலும், என் மனம் கரைந்து போய் நேரம் போவதே தெரியாமல் படித்துக் கொண்டிருந்தேன். என்னைச் சுற்றி இருள் சூழ்ந்ததைக்கூட என்னால் கவனிக்கமுடியவில்லை. இருப்பினும் புத்தகம் முழுவதையும் படித்துவிட்டுத்தான் நிமிர்ந்து பார்த்தேன்.

இரவு மணி எட்டாகிவிட்டதை கவனித்தேன். மதியம் உணவு உண்ணாமல் கூட படித்துக் கொண்டிருந்திருப்பதை உணர்ந்து கொண்டேன். தட்சிணாமூர்த்தியை வேறு சந்திக்கவேண்டுமே என்றவாறு புத்தகத்தை பையினில் வைத்துக் கொண்டு, பிம்பல்வாடி ரோடு எங்கிருக்கிறது என்று விசாரித்துக் கொண்டு 18 ஆம் எண் வீட்டைத் தேடினேன். சிறிது நேரத்தில் 18 ஆம் நம்பரைக் கண்டுபிடித்தேன். ஆனால் அது வீடுஇல்லை. அது ஓர்காலி மனை.

– தொடரும்.

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

சமர்த்த சத்குரு வீரடி சாய் மஹராஜின் க்ருபையாலும், கலியுக பரிபூரண தத்த அவதாரியான, ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அனுக்கிரகத்தினாலும், கலியுகத்தில் இருந்து மீண்டும் சத்ய யுகம் உருவாக ஸ்ரீ வல்லபர் மீண்டும் அவதாரம் செய்து, உயிர்கள் அனைத்திற்கும் நல்லருள் பொழிந்திட, சுவாமியின் நாம ஜபம் ஒன்றே முழுமையான பாதுகாப்பு கருவியாகும்.



"திகம்பரா திகம்பரா ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப திகம்பரா"

"திகம்பரா திகம்பரா ஸ்ரீ சக்ரதத்தாத்ரேயா திகம்பரா"

– எனும் சக்தி வாய்ந்த நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மாமந்திரத்தை தினமும் "108" முறையாவது ஜபம் செய்து, எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து தற்காப்பு பெற்றிடுவோம் வாருங்கள் நண்பர்களே!

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; சுந்தர்சாய், 9789404451

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"



– ஜெயந்தி ஸ்ரீராம்

குரு அந்த வயதான பெண்ணுக்கு எப்படி தாயத்து கொடுத்தார். அவர்கள் அந்தப் பிரட்சனையில் இருந்து விடுபட்டார்களா? சத்ய சாய்பாபாவின் வாக்கு எப்படி பலித்தது என்பதை இம்மாதம் படியுங்கள்.

குரு அவர்கள் தனது குருநாதரின் பிறந்தநாளுக்காக கும்பகோணம் புறப்பட்டுக் கொண்டிருந்த போதுதான் அந்த வயதான பெண்மணி குருவை தொலைபேசியில் தொடர்பு கொண்டார்கள். நல்லவேளையாக கும்பகோணத்திற்கு அருகில் இருந்து தொடர்பு கொண்டதனால் மறுநாளே அவர்கள் குருவை சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. இதைத்தான் குருவருள் என்பார்கள்.

உடனே குரு அவர்கள் நாளை நான் கும்பகோணம் வருகிறேன். எனது பணி முடிந்ததும் நானே உங்கள் வீட்டிற்கு நேரில் வந்து "சாயி தாயத்தை" தருகிறேன். என்று கூறிவிட்டு, முதல் "சாயி தாயத்து"டன் குடந்தை புறப்பட்டார்கள்.

மறுநாள் குடந்தையில் தனது குருவின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு, அருகில் உள்ள பாபநாசம் என்ற ஊருக்குச்சென்று அந்த வயதான பெண்மணியை சந்தித்து "சாயிதாயத்தை" வழங்கியிருக்கின்றார்.

"சாயி தாயத்தை" பெற்றுக்கொண்ட அந்தப் பெண் குருவின் கைகளைப் பிடித்துக் கொண்டு உணர்ச்சிவசப்பட்டு அழுதிருக்கின்றார். அவரை சமாதானப்படுத்தி பழைய நிலைக்கு கொண்டுவர படாதபாடு பட்டிருக்கின்றார் குரு அவர்கள்.

தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்ட பாட்டி, குருவின் கைகளைப் பிடித்து அழைத்துக் கொண்டு, அவர்களின் பூஜை அறைக்குச் சென்றிருக்கின்றார். அங்கே குருவிற்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்திருக்கின்றது. ஆம் அங்கே மிகப்பெரிய சத்திய சாய்பாபாவின் புகைப்படமும், அருகிலேயே சீரடி சாய்பாபாவின் புகைப்படமும் மாட்டப்பட்டிருக்க, அதற்குக் கீழே,

பென்சிலால் வரையப்பட்ட தனது ஓவியத்தைக் கண்டிருக்கின்றார் குரு.

இதென்ன என்னை வரைந்து வைத்திருக்கின்றீர்கள். என்னை இதற்கு முன்பு எங்காவது பார்த்திருக்கின்றீர்களா?

இல்லை எனது புத்தகத்தை படித்திருக்கின்றீர்க ளா? என்று கேட்க, அதற்கு பாட்டி, இல்லை சாய்ராம். நான் இதற்கு முன்பு உங்களை பார்த்ததில்லை. நீங்கள் புத்தகம் நடத்துகின்றீர்கள் என்பதும் இப்போது நீங்கள் கூறித்தான் எனக்குத் தெரியும்.



நேற்று காலையில் உங்களிடம் தொலைபேசியில் பேசியஉடன் எனக்கு ஒரு நம்பிக்கை வந்தது. ஆனால் நீங்கள் சென்னையில் இருந்து வர வேண்டுமே! எந்தத்தடங்கல்களும் இல்லாமல் நீங்கள் எனது வீட்டிற்கு வரவேண்டும். அப்படி நீங்கள் வருவ தற்கு முன்பு உங்களை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் என்று பகவான் சத்ய சாயிடம் வேண்டுதல் வைத்தேன். இன்று காலையில் நான் தியானத்தில் இருந்தபோது உங்களது உருவத்தினை கண்டேன்.

அது நீங்கள் என்று எனக்கு தெரியாது. இருந்தாலும் சிறிது வரையத் தெரிந்ததால், தியானத்தில் வந்த உருவத்தினை வரைந்து வைத்துக் கொள்வோம் என்று வரைந்தேன். நன்றாக இருக்கிறதா? என்று கேட்க, குருவும் மிகவும் நன்றாக இருக்கிறது. அந்த ஓவியத்தை எனக்குத் தரமுடியுமா என்று கேட்டிருக்கின்றார்.

அதற்கு அந்த பாட்டி, அது எனக்கு சாயி கொடுத்தது. அது எனக்குத்தான். நான் யாருக்கும் கொடுக்கமாட்டேன். எனக்கு சத்ய சாயி தியானத்தில் காட்டிய உருவமும், நீங்களும் ஒரே மாதிரி இருக்கின்றீர்கள். அதை நினைத்துத் தான் உங்களைப் பார்த்ததும் உணர்ச்சிவசப்பட்டு அழுது விட்டேன். மகான்களின் ஆசிபெற்ற பிள்ளை நீங்கள். எனக்கு ஒரு உதவி செய்யுங்கள். நான் குளித்துவிட்டு வருகிறேன். நீங்களே என் கைகளில் சாயி தாயத்தை கட்டிவிடுங்கள் என்று கூறிவிட்டு, குளித்துவிட்டு வந்து குருவின் கைகளால் சாயி தாயத்தை கட்டிக்கொண்டாராம் பாட்டி.

பிறகு, பாட்டியிடம் குரு விடை பெற்றுக் கொள்ள, பாட்டியோ, பிடிவாதமாக பத்து நிமிடம் இருங்கள் உங்களுக்கு இட்லி வார்த்துத் தருகிறேன். நீங்கள் சாப்பிட்டுவிட்டுத்தான் செல்ல வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்க, குருவும், சற்று நேரம் தாமதித்து பாட் டியின் கையால் உணவு உண்டு விட்டு புறப்படும் சமயம் வீட்டு வாசலில் ஓர் கார் வந்து நின்றிருக்கின்றது.

காரில் இருந்து எழுபது வயதில் ஒரு பாட்டி இறங்கியதைப் பார்த்ததும் வீட்டுக்காரப்பாட்டி சற்று உணர்ச்சி

வசப்பட்டு, அய்யய்யோ! இவள் தான் என் தங்கை! இவளால்தான் இவ்வளவு பிரச்சனையும் எனக்கு வந்தது. இப்போது எதற்கு இங்கு வந்திருக்கின்றாள் என்று தெரியவில்லையே! என்று பதட்டமாகி இருக்கின்றார்.

குருவோ, பாட்டியிடம் பதட்டப் படாமல் முதலில் அவரை வரவேற்று உபசரியுங்கள் என்று கூற, பாட்டியும் தன் தங்கையை வரவேற்று உபசரிக்க, வெகுநாட்களுக்கு பின்பு இருவரும் நேரில் சந்தித்ததனால் சற்று உணர்ச்சிவசப்பட்ட நிலையில், சிறிது நேரம் கண்ணீர்மல்க பார்த்துக் கொண்டிருந்தவர்கள், பின்பு ஒருவரை ஒருவர் நலம் விசாரித்துக்கொண்டு, சற்று அமைதியானார்கள்.

பாட்டி குருவை தன் தங்கைக்கு அறிமுகப்படுத்தி வைக்க, மூவரும் சாயி லீலைகளைப்பற்றி பேசிக் கொண்டிருக்க, அப்போது வெளியே சென்றிருந்த அவர்களது மகனும் வீட்டிற்கு வர மூவரும் மனம் விட்டு பேசியிருக்கின்றனர். முடிவில் நாற்பது வருடங்களாக அவர்களுக்குள் இருக்கும் பிணக்கு ஒருவழியாக தீர்க்கப்பட்டு மூவரும் ஒன்றாக ஒரே வீட்டில் சேர்ந்து வாழ்வதாக முடிவு செய்திருக்கின்றார்கள்.

ஒருவழியாக அவர்களது குடும்ப பிரட்சனை, தீர்க்கப்பட்டு ஆனந்தத்துடன் குரு ஊர் திரும்பினார்கள். நான்கு நாள் கழித்து பாட்டி எழுதிய கடிதம் எங்கள் வீட்டிற்கு வந்தது. அன்புள்ள சாய்ராம். கடந்த வாரம் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களை



என்னவென்று கூறுவது. என்னுடைய 85 வது வயதில் இப்படியொரு அனுபவம் எனக்கு ஏற்படவேண்டும் என்பது சத்யசாயியின் சங்கல்ப்பம் போலும். 20 ஆண்டுகளுக்கு முன்பாக இதே போன்று சிரமம் ஏற்பட்டபோது, சத்யசாயியே நேரில் என்னைக் காப்பாறியருளினார்.

20 ஆண்டுகளுக்குப் பின்பு அதேபோன்று சிரமம் ஏற்பட்டபோது. அவர் பூத உடலோடு இல்லையாயினும் உங்களது வடிவத்தின் மூலம் எனக்கு பெரிய உதவியை செய்திருக்கின்றார். நீங்கள் சாயி தாயத்தை என் கைகளில் கட்டிய நான்கு மணி நேரத்திற்குள் என்று நாற்பதாண்டு கால பிரட்சனை உங்களின் கண்முன்னால் தீர்க்கப்பட்டது. இப்போது நாங்கள் மூவரும் ஒரே வீட்டில் ஒற்றுமையாக வாழ்கிறோம். பகவான் சத்யசாயிக்கும், உங்களுக்கும் எங்களது மனமார்ந்த நமஸ்காரங்கள்.

இந்த உதவியை நான் என்றென்றும் மறக்க மாட்டேன். என்னைப்போன்று

சிரமத்தில் இருக்கும் அநேக பக்தர்களின் பிரட்சனையை சாயிநாதரின் அருளால் தீர்த்து வைத்து நீங்கள் நெடுங்காலம் சாயி சேவை புரிய வேண்டும் என்று உங்களை மனதார வாழ்த்துகிறேன். என்று குருவைப் பாராட்டிக் கடிதம் எழுதியிருந்தார்.

இவ்விதம் முதல் "சாயி தாயத்து" லீலையை சாயி நாங்கள் வியந்து போகுமளவிற்கு நிகழ்த்திக்காட்டினார். மேலும் இந்த அற்புத "சாயி தாயத்து" அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், நமது இதழுக்கு சந்தாதாரர்கள் அதிகரிக்க வேண்டும் என்பதற்காகவும், நமது சாயி மகராஜ் குருவை தேடி மாத இதழுக்கு 3 வருட சந்தா ரூ. 550/ கட்டுபவர்களுக்கு "சாயி தாயத்து" இலவசமாக வழங்கப்படும் என்று அறிவித்து இன்று வரை குரு அவர்கள் அதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

இந்நிகழ்விற்குப்பின் ஏராளமான சாயி பக்தர்களும், சாயி பக்தர்கள் அல்லாதவர்களும் "சாயி தாயத்தின்" மூலம் அநேக நன்மையை பெற்றிருக் கின்றனர். இன்னும் பெறுவர் என்று கூறி சாயியின் அடுத்த லீலைக்குச் செல்வோம்.

ஒரு வியாழக்கிழமை பூஜையில், சென்னை சூளையைச் சேர்ந்த கணவன் மனைவி இருவரும் முதல்முறையாக எங்களது சபைக்கு வந்து குருவை சந்தித்து, தங்களது பிரட்சனையை பகிர்ந்து கொண்டனர். என் மனைவிக்கு கர்பப் பையில் புற்றுநோய்கட்டி இருப்பதாக மருத்துவர்கள் கூறி உடனடியாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று கூறுகின்றார்கள்.

என் மனைவிக்கு அறுவை



சிகிச்சை செய்து கொள்ள இஷ்ட மில்லை. நாங்கள் இருவருமே சாயி பாபாவின் தீவிர பக்தர்கள். எது நடந்தாலும் சாயியே துணை என்று வந்திருக்கின்றோம். நீங்கள் எங்க ளுக்காக பிரார்த்தனை செய்து கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் வைத்து மருத்துவ பரிசோதனை செய்துகொண்ட விபரங்களை சாயியின் பாதங்களில் சமர்பித்தனர்.

சாயி மீதான உங்களது நம்பிக்கை நிச்சயமாக உங்கள் மனைவியை குணப்படுத்தும். உங்களுக்காக நாங்கள் தொடர்ந்து பிரார்த்திக் கின்றோம் என்று கூறி அன்றைய பிரார்த்தனையை முடித்தார்கள். அடுத்த வாரம் எங்களது குழு சீரடி புனித யாத்திரை செல்ல வேண்டியிருந்ததால் அதைப் பற்றிய சந்தேகங்களை பக்தர்கள் குருவிடம் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்கு விளக்கம் கூறிக் கொண்டிருந்த குரு திடீரென புதிதாக வந்திருந்த தம்பதியினரை நோக்கி நீங்கள் இருவரும் என்னுடன் சீரடிக்கு வருகின்றீர்களா? என்று கேட்டார். அவர்களும் உடனே ஆர்வமாக,

எங்களுடைய ஒரே ஆசையே அதுதான் சாய்ராம். இதுவரை நாங்கள் சீரடிக்கு சென்றதே இல்லை. நீங்கள் கூட்டிப்போகின்றீர்கள் என்றால் கண்டிப்பாக வருகின்றோம் என்றனர்.

அப்படியானால் சரி, பாபா உங்களை சீரடிக்கு அழைக்கின்றார். நீங்கள் பயணத்திற்கு தயார் ஆகுங்கள். நான் டிக்கெட்டுக்கு முயற்சி செய்கிறேன். உங்களுக்கு டிக்கெட் கிடைத்துவிட்டால் பாபா அனுமதித்துவிட்டார் என்று அர்த்தம். என்று கூறி அவர்களை அனுப்பி வைத்தார். தம்பதியினரும் மிகுந்த ஆனந்தத்துடன் விடைபெற்றுச் சென்றனர்.

பாபாவின் அருளால் அந்த தம்பதியின ருக்கு இரயிலில் டிக்கெட் கிடைத்து விட்டது. அடுத்தவாரமே எங்களது குழுவினருடன் தம்பதியினரும் இணைந்து கொள்ள, எங்களது சீரடி புனித யாத்திரையை தொடங்கியது.

பயணம் முழுவதும் அந்த பெண் மணிக்கு பல்வேறு சிரமங்களும், உபாதைகளும் ஏற்பட்டது. சில பக்தர்களிடையே, உடல் நலம் இல்லாதவர்களை அழைத்து வந்து அனைவரையும் குரு சிரமப்படுத் துகின்றாரே என்பது போன்ற சில பேச்சுக்கள் வந்தது.

குரு எதைப்பற்றியும் கவலைப்படா மல் சீரடிப்புனிதப் பயணத்தில் அந்த பெண்மணிக்கு பாபாவின் கதைகளைக்கூறி உற்சாகப்படுத்திக் கொண்டே வந்தார். உடல் என்ன துன்பத்தை வேண்டுமானாலும் அனுபவிக்கட்டும். மனம் சாயியையே நினைக்கட்டும். என்று சத்சங்கம் நிகழ்த்திக்கொண்டே ஆனந்தமாக சீரடிப் பயணத்தை நிறைவு செய்தார்.

ஆறு மாதம் சென்றிருக்கும். முகம் முழுவதும் மகிழ்ச்சியுடன் தம்பதியினர் இருவரும் குருவை காண வந்திருந்தனர். வந்தவர்கள் குருவிடம் ஆசி பெற்றுக்கொண்டு காணிக்கை செலுத்தினர். அவர்கள் கண்கள் ஆனந்தக்கண்ணீரை சொரிந்தன.

சிறிது நேரத்திற்குப்பின் பெண்மணி பேச ஆரம்பித்தார். சாய்ராம் நான் பாபாவைப்பற்றி அநேக கதைகளைக் கேட்டிருக்கின்றேன். பல பக்தர்கள் தங்களது வாழ்க்கையில் நிகழ்ந்த பல அற்புதங்களை கூறும்போது இதெல்லாம் சாத்தியமா? என்றெல்லாம் சந்தேகப்படுவேன்.

ஆனால் அதே அதிசயம் என் வாழ்க்கையிலும் நடக்கும் என்று நான் நினைத்துப் பார்க்கவே இல்லை. என்னைவிட என் கணவர், நிச்சயம் பாபா என்னை கைவிடமாட்டார் என்று நம்பினார். அந்த நம்பிக்கை வீண் போகவில்லை.

நான் உங்களுடன் சீரடிக்கு வரும் போது உண்மையிலேயே உடல் உபாதையால் மிகுந்த சிரமப்பட்டேன். நீங்கள் எங்களுக்கு பல கதைகள் கூறிக்கொண்டே வந்தாலும் என் மனம் தேவையில்லாமல் உங்களையும் உங்கள் குழுவினரையும் சிரமப்படுத்தி விட்டோமோ என்று என்னை நானே நொந்து கொண்டேன்.

ஒருவழியாக சீரடி பயணம் முடிந்து வீட்டிற்கு வந்ததும் தொடர்ந்து ஒரு வாரமாக உடல் நலம் குன்றி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டேன். அங்கு என்னை பரிசோதித்த மருத்துவர்கள் கூறியதைக்கேட்டு அதிர்ச்சியாக இருந்தது. அதே நேரம் ஆனந்தமாகவும் இருந்தது. பகவான்

சாயிநாதரின் அற்புதத்தை கண்டு வியந்து போனோம்.

உண்மைதான் சாய்ராம். எனக்கு வந்திருப்பது புற்றுநோய் கட்டி இல்லை என்றும், சாதாரண கொழுப்புக்கட்டி என்றும் அதை மாத்திரைகளின் மூலமே சரிப்படுத்திவிடலாம் என்று கூறிவிட்டார்கள். கடந்த ஒரு மாத கால சிகிச்சையில் நன்றாக உடல் தேறிவிட்டேன். மனமும் மிகுந்த ஆனந்தமாக இருக்கின்றது.

தனியார் மருத்துவமனையில் அனைத்து பரிசோதனைகளிலும் புற்று நோய் என்று வந்தது. அது பகவான் சாயிநாதரால் சாதாரணக் கட்டியாக மாறி இப்பொழுது பூரண மாக குணமாகிவிட்டது என்று மருத்துவர்கள் கூறிவிட்டார்கள் சாய்ராம். அனைத்தும் சாயிநாதரால் தான் நிகழ்ந்தது. இனி என் வாழ்கை முழுவதும் சாயிநாதருக்கே பணி செய்வேன் என்று பரிபூரணமாக பகவான் சாயிநாதரிடம் சரணாகதியா னார் அந்தப் பெண்மணி.

இதுவன்றோ சாயி லீலை. என்னைப் பொறுத்தவரையில் நோய் என்பதும், துன்பம் என்பதும் ஒன்றுமேயில்லை. ஒருவேலை அது நமக்கு கர்மவினை என்றாலும் அதன் மூலம்,பகவான் சாயிநாதர் நமக்கு "சரணாகதி" என்ற மகத்தான பாடத்தை கற்று தருகின்றார். சாயிருக்க பயமேன்.

அடுத்த மாதம் மாற்றுமத அன்பருக்கு அவரது நின்றுபோன கட்டிடத்தை பாபா எப்படி கட்டித் தந்தார் என்ற லீலையை பருகுவோம்.

– தொடரும்.

பெற்றோர்களே தெய்வம்!



தெய்வத்தால் ஆகாது எனினும் என்ற குறளில் இறைவனால் ஆகாத போது நம்முடைய முயற்சி பலன் தரும் என்கிற வகையில் மக்கள் தவறான அர்த்தம் புரிந்து கொள்கின்றனர்! தெய்வம் என்றால் இறைவனில்லை! பெற்றோர்களைத்தான் குறிக்கும். பெற்றோர்களால் நமக்கு ஏதேனும் உதவி நேராத போது நம்முடைய முயற்சியால் சாதிக்கலாம் என்பதே அந்தக் குறள்!

ஆகவே தான் அதே சமகாலத்தவரான அவ்வை "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்!" என்கிறார்! பெற்றோரே தெய்வங்கள்! வேறு தெய்வம் இல்லை! ஆகவே பெற்றோரை வணங்க வேண்டும்! தெய்வம் தொழாஅள் என்கிற குறளும் அதுவே!

தெய்வங்களாகிய பெற்றோர்களே குருவை நோக்கி அழைத்துச் செல்கிறார்கள்! குரு இறைவனை அடைய அகநோக்கில் நமக்குள்ளேயே வழிகாட்டுகிறார்! தெய்வம் இல்லாதவர்க்கு பகவான் பாபாவே தெய்வமாகவும் விளங்குகிறார்! கங்கை நதியை காசிச் சொம்பில் அடைத்து வீட்டிற்கு அழைத்து வருவது போல் நம் கூடவே பாபா வருகிறார்!

சுவாமி விவேகானந்தரின் - ஞானமொழிகள்

பெரியவர்கள் பெரும் தியாகங்களைச் செய்கிறார்கள். அதன் விளைவாக வரும் நன்மைகளை மனித குலம் பெற்று அனுபவிக்கிறது. இந்த உண்மையை நீ உலக வரலாறு முழுவதிலும் காணலாம்.

உனது சொந்த முக்திக்காக எல்லாவற்றையும் நீ துறந்துவிட விரும்பினால் அது அவ்வளவு ஒன்றும் பாராட்டுவதற்கு உரிய தில்லை. உலகத்தின் நன்மைக்காக உன் முக்தியையும் நீ தியாகம் செய்து விட விரும்புகிறாயா? அப்படி நீ செய்தால் கடவுளாகவே நீ ஆகிவிடுவாய். இதைச் சற்றுச் சிந்தித்துப் பார்.

புனிதமான வாழ்க்கையின் விளைவாக எழும் உற்சாகத்தினால் எழுச்சி அடைந்தவர்கள் கடவுளிடம் அழியாத நம்பிக்கை என்பதை அரணாகப் பெற்றவர்கள். ஏழை எளியவர்களிடமும் தாழ்ந்தவர்களிடமும் ஒடுக்கப்பட்ட வர்களிடமும் கொண்ட இரக்கம் காரணமாகச் சிங்கத்தைப் போன்ற தைரியம் அடைந்தவர்கள்.

இத்தகைய ஆண்களும் பெண்களும் நூறாயிரம் பேர் வேண்டும். இவர்கள் மோட்சம், பரோபகாரம், தாழ்ந்தவர்களின் முன்னேற்றம், சமூக சமத்துவம் ஆகிய இந்த உயர்ந்த கொள்கைகளைப் பிரசாரம் செய்தபடி இந்த நாட்டின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைவரை செல்வார்கள்.

என் மகனே! உனக்கு எனது



சொற்களின் பேரில் ஏதாவது மரியாதை இருக்குமானால், முதலாவதாக உன்னுடைய அறையின் எல்லாக் கதவுகளையும், ஜன்னல்களையும் திறந்துவிடு. இதுவே நான் உனக்குத் தரும் முதல் அறிவுரையாகும். கீழ்நோக்கிச் சென்றபடியும் துன்பத்தில் மூழ்கியபடியும் ஏராளமான ஏழை மக்கள் நீ வாழும் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நீ அவர்களை அணுகிச் சென்று உன்னுடைய ஆர்வத்தையும் உற்சாகத் தையும் செலுத்தி அவர்களுக்கு தொண்டு செய். நோய்வாய்ப் பட்ட வர்களுக்குத் தேவையான மருந்து வகைகளை வழங்க ஏற்பாடு செய். உன்னுடைய முழுக் கவனத்தையும் செலுத்தி அந்த நோயாளிகளுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்.

பசியால் வாடுபவனுக்கு உணவு கொடு அறியாமையில் உள்ளவனுக்கு உன்னால் முடிந்த அளவிற்குக் கல்விய றிவைப் புகட்டு. என் மகனே! நான் உனக்குச் சொல்கின்ற இந்த முறையில்

உன்னுடைய சகோதரர்களாகிய மக்களுக்கு நீ தொண்டு செய்ய ஆரம் பிப்பாயானால் நிச்சயமாக உனக்கு அமைதியும் ஆறுதலும் கிடைக்கும்.

அந்நாளில் நிலவிய தொண்டு மனப்பான்மை, கீழ்ப்படிதல் தன்னடக் கம் ஆகிய வீரனுக்கு உரிய பண்புகள் இன்று எங்கே போய் விட்டன? போருக்குச் செல்லும் வீரன் தன்னைத் தியாகம் செய்து கொள்கிறனேயன்றி, தனது நலத்தைக் கருதுவதில்லை.

ஒருவன் மற்றவர்களுடைய இதயங்களின் மீதும் வாழ்க்கையின் மீதும் ஆணை செலுத்த வேண்டுமா னால் முதலில் கட்டளைக்கு உட்பட்டு முன்னேறிச் சென்று தன் உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும்.

பணம் படைத்தவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் மீது ஒருபோதும் நம்பிக்கை வைக்க வேண்டாம். அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார் கள் என்பதை விட, செத்துப் போனவர்களாகவே இருக்கிறார்கள். பணிவும் தாழ்மையும் கொண்டு, அதே சமயத்தில் நம்பிக்கைக்கு உரியவர்களுமாகிய உங்களிடம்தான் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

கடவுளிடம் நம்பிக்கை வையுங்கள் திட்டம் எதுவும் தேவையில்லை. அத னால் ஆகப்போவதும் ஒன்றுமில்லை. துன்பத்தால் வாடுகிறவர்களுக்காக இரக்கம் கொள்ளுங்கள். பிறகு உதவிக்காகக் கடவுளை நோக்குங்கள். உங்களுக்குத் தேவைப்படும் உதவி நிச்சயமாக வந்தே தீரும்.

குளிராலோ பசியாலோ இந்த நாட்டிலேயே(அமெரிக்காவில்) நான் அழிந்து போக நேரலாம். ஆனால் இளைஞர்களே! ஏழைகள், அறியாமை மிக்கவர்கள், நசுக்கப்பட்டவர்கள் ஆகியோருடைய நலனுக்காகப் போராடும் என்னுடைய இரக்கம், முயற்சி ஆகியவற்றை உங்களிடம் நான் ஒப்படைக்கிறேன்.

நாள்தோறும் கீழ்நோக்கிச் சென்று கொண்டிருக்கும் இந்த முப்பது கோடி மக்களின் நல்வாழ்வை மீட்டுத் தருவதற்காக உங்கள் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணிப்பதாகச் சபதம் மேற்கொள்ளுங்கள்.

செய்யும் தொழிலே சாயி!

எந்தத் தொழிலும் இழிவானதல்ல! இதை நாம் முதலில் உணர வேண்டும்! செய்யும் தொழிலே இறைவன் பாபா! எவர் எந்தத் தொழிலை நேர்மையாகச் செய்தாலும் அதுவே உயர் தொழில்! வருவாயை வைத்து இது உயர் தொழில், தாழ்ந்த தொழில் என நாம் நினைத்தால், அது அறியாமையே!



எந்தத் தொழில் நமக்கு நிம்மதியைத் தரு கிறதோ அதை விட அறம் சார்ந்த தொழில் வேறு எதுவும் இல்லை! எவரேனும் நமது தொழிலையும் வருவாயையும் எள்ளி நகையாடினால், அவ்விடம் விட்டு நகர்ந்துவிடுங்கள்! வாழ்க்கை என்பது வாழ்வதற்கே! பிறரிடம் நமது வாழ்வை நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை!

தாழ்வு மனப்பான்மை நமக்கு தேவையே இல்லை! நமது அறச்செயலே நாம் இந்த சமுதாயத்திற்கு விட்டுச் செல்லப் போகிற உண்மையான வாரிசு!

ஸ்ரீ யோக தரிசன சீரடி சாய்பாபா பிரார்த்தனை இல்லம்

மதுரை அழகர் கோவில் செல்லும் வழியில் உள்ள யானைமலை அடிவாரத்தில், ஸ்ரீ யோக நரசிம்மர் ஆலயத்தின் அருகில், ஸ்ரீ யோக தரிசன சீரடி சாய்பாபா பிரார்த்தனை இல்லம் இயற்கை எழிலுடன் சிறப்புற அமைந்திருக்கிறது.

ஆலய நிர்வாகி திரு. சி. சாய் ராமச்சந்திரன் எங்களை அன்புடன் வரவேற்று உபசரித்தார். சாயி, சாயி என்று சதா சர்வகாலமும் சாயி சிந்தனையில் இருக்கும் நல்ல மனிதர். ஆலயத்திற்கு வருவோரிடம் சாயியைப் பற்றியே ஓய்வில்லாமல் பேசிக் கொண்டே இருக்கும் நல்ல ஆத்மா. எங்களுக்கு பொன்னாடை போர்த்தி நினைவுப்பரிசு வழங்கி கவுரவித்தார்.

இவ்வாலயத்தை சாயியே அமைத்துக் கொண்டிருக்கின்றார் என்றுதான் எண்ணத்தோன்றுகிறது. தற்போது ஆலயம் அமைந்திருக்கும் இடத்தை முதலில் ஏ.டி.எம் மையம் அமைப்பதற்கு என்றுதான் வாங்கியிருக்கின்றார்கள். பிற்பாடு வங்கி அதிகாரிகள் இடத்தை தேர்வு செய்யாததால், வேறு பல தொழில்கள் செய்ய முயற்சித்தும் அந்த இடத்தில் எதுவும் அமையாமல் இறுதியில் பகவான் சாயிநாதரின் ஆலயம் அமைந்திருக்கின்றது.

இறைவன் முரளிதரனுக்காக கட்டப்பட்ட ஆலயத்தில் இறுதியாக பகவான் சாயிநாதரே வந்தமர்ந்தது போன்று இறுதியாக பகவான் சாயி நாதரே



"யோக சாயி" யாக வந்தமர்ந்து விட்டார்.

அன்னதான விரும்பியான ஆனந்த சாயியின் விருப்பத்திற்கிணங்க ஆலயத்தில் மிகச்சிறப்பான அன்னதான சேவைகளையும் வெகு சிறப்பாக செய்து வருகிறார் சாயி ராமச்சந்திரன்.

மதுரை ஒத்தக்கடை, அரும்பனூர் திருத்தலத்தில், வேண்டியவர்களுக்கு வேண்டும் வரத்தை அருளிக் கொண்டிருக்கும் கலியுகத்தின் கண்கண்ட தெய்வம், பகவான் சாயிநாதரின் ஆலயம் அமைந்து நான்கு வருடங்கள் ஆகிவிட்டன.



இவ்வாண்டு வரும் 13.12.2023 புதன்கிழமை அன்று காலை 6.30 இல் இருந்து 10 மணிக்குள் நான்காம் ஆண்டு வருடாபிசேகப் பெருவிழா வெகு விமரிசையாக நடைபெற உள்ளது.

விழாவில் "வாழும்பாபா" ஸ்ரீ அச்சு தானந்த சுவாமிகள் அவர்கள் சீரடியில் இருந்து வருகை தந்து விழாவில் கலந்து கொண்டு பக்தர்களுக்கு ஆசி வழங்குகிறார்கள். வாய்பிருக்கும் பக்தர்கள் ஆலய வருடாபிசேக விழாவில் கலந்து கொண்டு பகவான் சாயிநாதரின் ஆசியை யும், வாழும் பாபா ஸ்ரீ அச்சுதானந்த சுவாமிகளின் ஆசியையும் பெறுங்கள்.

அன்றைய தினம் ஈசான சிவம் ஸ்ரீ கல்கி கண்ணன் அய்யா அவர்கள் யாக பூஜை நிகழ்த்துகிறார்கள். சாயி அன்பர்கள் கலந்து கொண்டு பயன்பெற வேண்டுமாய் அனைவரையும் வருக! வருக என ஆலயத்தின் சார்பில் வரவேற்கிறோம்.

ஆலய தொடர்புக்கு:

ஸ்ரீ யோக தரீசன சாயிபாபா பிரார்த்தனை இல்லம்.

திரு. சீ. சாய் ராமச்சந்திரன்.

போன்: 98422 11702.



“குருவருள் மகிமைகள்” புத்தக வெளியீட்டு விழா!

கோவை இடையார் பாளையத்தில் உள்ள ஸ்ரீ சீரடி சாயி குருவருள் திருக்கோவிலில், திருமதி. புவனா பிரகாஷ் அவர்கள் எழுதிய “குருவருள் மகிமைகள்” புத்தக வெளியீட்டு விழாவும், பரிவார தெய்வங்கள் சன்னதிக்கான பூமி பூஜையும் கடந்த 19.11.23 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மிகச்சிறப்பாக துவங்கியது.

விழாவை சீரடி சாது, வாழும் பாபா, ஸ்ரீ அச்சுதானந்தா சுவாமிகள் அவர்கள் தலைமையேற்று, வாழ்த்துரை வழங்கி விழாவை துவக்கி வைக்க, ஆலய ஸ்தாபகர் திரு. சாயி சிவானந்தம் அவர்களின் வரவேற்புரையுடன் விழா இனிதே தொடங்கியது.

தொடர்ந்து ஸ்ரீ அச்சுதானந்தா சுவாமிகள் அவர்கள் “குருவருள் மகிமைகள்” புத்தகத்தை வெளியிட்டு ஆசீர்வதித்தார்கள். திரு. காசி விஸ்வநாதன் அவர்கள் புத்தகத்தைப் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள்.

பிரார்த்தனைச்செம்மல் திரு. சாய் கலியன் அவர்கள். நமது ஆசிரியரும், குண்டலினி யோகியுமான திரு. ஸ்ரீராம் அவர்கள், திருமதி. சுனந்தா ஆனந்த் அவர்கள், திரு. வேணுகோபால் சாய் அவர்கள், திரு. சாயி பிரசாத் சந்திரசேகர் அவர்கள், திரு சாயி பிரசாத் மாஸ்டர், அவர்கள், திருமதி. சௌம்யா ராஜு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழாவில் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர் அனைவரையும் விழா



குழுவினர் பொன்னாடை போர்த்தி கவுரவித்து நினைவுப் பரிசு வழங்கினர்.

விழாவில் கலந்து கொண்ட பக்த கோடிகள் அனைவருக்கும் காலை சிற்றுண்டியும், மதியம் அன்னதானமும் மிகச்சிறப்பாக வழங்கப்பட்டது. நிறைவாக நூலின் ஆசிரியர் திருமதி. புவனா பிரகாஷ் அவர்கள் நன்றியுரை வழங்க விழா இனிதே நிறைவுற்றது.

நிழ்ச்சியை திருமதி. கலைவாணி அசோகன் அவர்கள் தொகுத்து வழங்கினார்கள்.

குருவருள் மகிமைகள் புத்தகத்திற்கு நமது ஆசியர் திரு. ஸ்ரீராம் அவர்கள் வழங்கிய வாழ்த்துரை.



கோவை இடையார்பாளையத்தில் பகவான் சாயிநாதர், தானே இஷ்டப்பட்டு ஆலயம் எழுப்பிக் கொண்ட வரலாறும், அதனூடே ஆலயத்தில் அருள்பாலிக்கும் எங்கள் "அம்மையப்பன்" சீரடி சாயிநாதனவனின் பக்த லீலாமிருதத்தையும், தேனும் தினைமாவுமென கலந்தெடுத்து தந்திருக்கிறார் "சாயி பிள்ளை" சகோதரி புவனா பிரகாஷ் அவர்கள்.

தின்னத்தான் கசக்குமோ என்பதற்கினங்க முத்து முத்தான "குருவருள் மகிமைகளை"

திக்கித்தினறாத
தங்கத்தமிழினிலே
இழைத்திருக்கின்றார்.
இடராத நடை, தளராத வேகம், என்ன சொல்ல வேண்டும், எப்படிச்சொல்ல வேண்டும், எங்கே சொல்ல வேண்டும் என்பதை அழகிய திரைக்கதையாக்கி திகட்டாத செங்கரும்புச்சாறென வடித்துக் கொடுத்திருக்கிறார்.

ஆலய நிறுவனர் சிவானந்தா அவர்களின் நினைவலைகளும், ஆலயம் எழும்பிய விதமும், ஆலய அமைப்பும், சீரடி நாதனுக்கு நடத்தப்படும் அலங்காரமும், ஆரத்தியும், பல்லக்கு ஊர்வலத்தோடு சகோதரியின் தமிழ் நடை நம்மையும் சேர்ந்து ஆட வைக்கிறது.

காசி விஸ்வநாதன் அவர்களின் அருள்மொழித் தூண்டுதலும், அடுத்தடுத்து வரும் குருவருள் மகிமைகள் ஒன்பதும் ஒளிமயமான சாயிபகவானின் இருப்பைச் சுட்டும் அழகிய தொகுப்பு.

மராட்டியில் இருந்தும், ஹிந்தியில் இருந்தும் "அட்டகாப்பி" அடிக்காமல்







சொந்த அனுபவங்களை சுருக்கமாய் எழுதியதால் குருவருள் மகிமைகள் என் மனதிற்கு நெருக்கமாகவும், இணக்கமாகவும் இனிக்கின்றன.

"குருவருள் மகிமைகள்" வெளிவர முயற்சித்த அத்துணை சாயி நேசர்களையும் வாழ்த்தி, இப்புத்தகத்தை படிக்கும் சாயி பக்தர்களின் பிரார்த்தனைகள் அனைத்தும் விரைவாக நிறைவேறி, சாயிநாதரின் ஆசியுடன் நீள் ஆயுள், நிறை செல்வம், வான் புகழ், மெய்ஞானம் பெற்று வாழ்க வளமுடன் என்று, இம் மேலான அண்ட சராசரங்களையும் இயக்கி, கீழான கடையேன் எம்மையும் இயக்கிக் கொண்டிருக்கும் பகவான் சாயிநாதரைப் பணிந்து துதிக்கிறேன்.

புத்தகம் தேவைப்படுவோர் தொடர்புகொள்ளவும்:

ஸ்ரீ சீரடி சாயி குருவருள் ஆலயம்
70, சாயிபாபா கோவில் வீதி, இடையர்பாளையம்
தடாகம் ரோடு, கோவை – 641 025. www.saiguru.org
சாய் சிவானந்தம் + 91 94420 12468 திருமதி. புவனா பிரகாஷ் + 91 90033 36377

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

இலவச சீரடி புனிதப் பயணம்

நமது சாயி மகராஜ் குருவைதேடி ஆன்மீக மாத இதழின் சந்தாதாரர்களுக்கு,"இலவச சீரடி தரிசன வாய்பை" வழங்குகிறோம்.

ஆயுள் சந்தாதாரர்களில் ஒரு அதிர்ஷ்டசாலி குழுக்கலின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு சாய் தியானாலயா நடத்தும் 6 நாள் சீரடி புனித யாத்திரையில் கலந்து கொள்ளும் வாய்ப்பையும், 5 வருட சந்தாதாரர்களில் ஒரு அதிர்ஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்பட்டு 4 நாள் சீரடி புனித யாத்திரையில் கலந்து கொள்ளும் வாய்ப்பையும் இலவசமாக பெறுவார்கள்.

3 வருட சந்தாதாரர்களில் ஒருவருக்கு ரூ.1000 மதிப்புள்ள சிறப்பு பரிசும், 1 வருட சந்தாதார்களில் ஒருவருக்கு ரூ.500 மதிப்புள்ள சிறப்பு பரிசும் வழங்கப்படும்.

ஏற்கனவே உள்ள சந்தாதாரர்களையும் சேர்த்து, வரும், 31.12.2023 வரை இணையும் புதிய சந்தாதாரர்களுடன் வருகின்ற 07.01.2024 அன்று நடைபெறும் 66 வது புத்தக வெளியீட்டு விழாவில், பக்தர்களின் முன்னிலையில் குலுக்கல் நடத்தப்பட்டு அதிர்ஷ்டசாலி சந்தாதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

சந்தா கட்டுங்கள்! அதிர்ஷ்ட வாய்பை பெறுங்கள்!

1 வருட சந்தா – ரூ. 220 / 3 வருட சந்தா – ரூ. 550
5 வருட சந்தா – ரூ.1000 / ஆயுள் சந்தா – ரூ. 2000

தொடர்புக்கு:

ஆசிரியர், V. ஸ்ரீராம், செல்: 99418 16692

சிறப்பான, தரமான, நியாயமான
விலையில் மூக்கு கண்ணாடி வாங்க!

V.N. OPTICALS

Free Eye Testing
Frames Sun Glass & Contact lens
Rayban Frames & Sun Glass



No: 8/29, Durga colony,
(Near Poombukar, SBI),
Kolathur, Chennai - 99.
Cell: 98402 89093

சாய் தியானாலயா தவ மையம்
வழங்கும் 12வது புனித யாத்திரை

ONE & ONLY SHIRDI

4 நாட்கள், கட்டணம்: 3750/-
புறப்படும் நாள்: 06.03.2024 புதன்கிழமை
பார்க்கும் இடங்கள்: சீரடி ஸ்ரீ சாய் பாபா மந்திர், துவாரகாமாயி, சாவடி, லெண்டி பார்க், அப்துல்பாபா சமாதி, அடியவர்களின் சமாதி, லெட்சுமிபாய் வீடு, மகல்சாபதி வீடு, மாதவராவ் வீடு, பையாஜி வீடு, சிவநேசன் சமாதி, கந்தோபா ஆலயம், ரஹதா உபாசினி மகராஜ், குஷால்சந்த் வீடு, கற்பக விருட்சம், பஞ்சமுக கணபதி, வீரபத்ரா கோவில், ஜூவாலமுகி ஆலயம் ஓல்ட் சீரடி.

புனித யாத்திரையில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள்
01.11.2023க்குள் ரூ.2000/ செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளவும்.

குரு ஸ்ரீராம்சாய் அவர்களுடன் சத்சங்கம், தியானத்துடன் ஓர் ஆனந்தப்பயணம்

MAS மஞ்சு அசோசியேட்ஸ்

GA-232, உணவு தானிய மார்க்கெட், கோயம்பேடு, சென்னை 107.
போன்: 04424793822 /24793823 செல்: 9382163822.

வங்கிக்கடன்கள்

* வீட்டுக்கடன்
* அடமானக்கடன்
* வியாபாரக்கடன்





வருமானவரி தாக்கல்

* டேக்ஸ் ஆடிட்
* நான் டேக்ஸ் ஆடிட்



இன்ஸ்தூரன்ஸ்

* LIC,
* ஸ்டார் ஹெல்த்



மிகச்சிறப்பாக செய்து தருகிறோம்.

மக்கள் சேவையில் 22 ஆம் ஆண்டு!

வாடிக்கையாளர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றி!

குறிப்பு: 10 லட்சத்திற்குமேல் கடன்
தேவைப்படுவோர் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.



அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள் வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.

குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம் – ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம் – ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம் – ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம் – ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம் – ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!

எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer:
Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
98434 40806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON
LASTS LONG, REALLY LONG.










HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

"இறை ஞானி" குணங்குடி மஸ்தான்!



ராமநாதபுரம் மாவட்டம், தொண்டிக்கு வடமேற்கில் பத்து மைல் தொலைவில் உள்ள குணங்குடி என்ற சிற்றூரில் 1792 ஆம் ஆண்டு நயினார் முகம்மது பாத்திமா தம்பதியருக்குப் பிறந்தார். அவருடைய தாய்வழிப் பாட்டன் முல்லா ஹுசைன் நபி (ஸல்) வழி வந்தவர் என குணங்குடி மஸ்தான் சாகிபு எழுதிய அரபு மொழி இரங்கல் பாடலில் குறிப்பிடுகிறார்.


"தரீக்கா" என்ற சொல்லுக்கு வழி பாதை என்று பொருள். இறைவனை அறியவும் அவனை அடையவும் வழிகாட்டும் வழிகள் என்று அர்த்தம். கீழக்கரையில் இஸ்லாமிய மார்க்கப் பிரிவுகளில் ஒன்றான காதிரியா தரீக்காவின் 'தைக்கா சாஹிபு' என்றழைக்கப்பட்ட செய்கு அப்துல் காதிரி லெப்பை ஆலிமிடம் இஸ்லாமிய சமய ஞானத்தையும், தவ வழிமுறைகளையும் கற்றார்.

அவரது குடும்பத்தார் தாய்மாமன் மகள் மைமூனை மணமுடித்து வைக்க முடிவு செய்த போது, அதை மறுத்து தன் 17ஆம் வயதில் குடும்பத்தை துறந்தார்.

1813ஆம் ஆண்டில் திரிசிரபுரத்து ஆலிம் மௌல்வி ஷாம் சாகிபுவிடம் இஸ்லாமிய யோக நெறியில் தீட்சை பெற்றார். இதன் பின்னர் "சிக்கந்தர் மலை" என்று அறியப்படும் திருப்பரங்குன்றத்திற்குச் சென்று அங்கு நாற்பது நாட்கள் 'கல்வத்' எனப்படும் தனிமைத் தவத்தில் ஈடுபட்டார்.

இதன் பின்னர் அறந்தாங்கி நகருக்கு அருகில் உள்ள கலகம் என்ற ஊரில் ஆறு மாதங்கள் தங்கி தவம் இயற்றினார். தொண்டியில் தன் தாய்மாமனின் ஊராகிய வாழைத்தோப்பில் நான்கு மாதங்கள் தங்கி தவம் புரிந்தார். காதிரியா தரீக்காவின் முஹியத்தீன் அப்துல்காதிர் ஜீலானியை தனது ஞானகுருவாக ஏற்றுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து சதுரகிரி, புறாமலை, நாகமலை, ஆனைமலை போன்ற மலைகளிலும், காடுகளிலும், நதிக்கரைகளிலும் அலைந்து திரிந்து தவ வாழ்க்கை மேற்கொண்டார். உலகப்பற்றை நீக்கி பல ஊர்களுக்கு நாடோடியாக அலைந்தார். இஸ்லாமிய இறைப் பித்தரானார். மஸ்த் என்ற பாரசீகச் சொல்லுக்கு போதைவெறி என்று பொருள். இறைகாதல் போதையில் வெறி பிடித்த ஞானியரை 'மஸ்தான்' என அழைப்பது மரபு.



ஏழு ஆண்டுகள் இவ்வாறிருந்து, பின்னர் வடஇந்தியா சென்று பலருக்கு ஞானோபதேசம் செய்தார். பின்னர் வடசென்னையில் ராயபுரத்தில் பாவா லெப்பை என்ற இஸ்லாமியருக்குச் சொந்தமான லெப்பைக் காடு என்ற பகுதியில் தங்கினார். பாவா லெப்பை இவருக்கு 'தைக்கா' (ஆஸ்ரமம்) அமைத்துக் கொடுத்திருக்கிறார். அங்கே தவவாழ்க்கை மேற்கொண்டார்.

குணங்குடியார் இஸ்லாமியச் சூஃபி ஞானியாக இருந்தபோதிலும் அவரது சமரச நோக்கின் காரணமாக அவர் சீடர்களாக இந்துக்களும், இஸ்லாமியர்களும் இருந்தனர். ஐயாசாமி முதலியார் (குணங்குடி நாதர் பதிற்றுப் பத்தந்தாதி எழுதியவர்), மகாவித்துவான் திருத்தணி சரவணப்பெருமாளையர் (நான்மணிமாலை), வெங்கட்ராயப் பிள்ளை கவிராயர், கோவளம் அருணாசலம் முதலியார் மகன் சபாபதி (தோத்திரப் பாடல்கள்), காயற்பட்டினம் ஷெய்கப்துல் காதிர் நயினார் லெப்பை (வாயுரை வாழ்த்து) ஆகியோர் இவரது சீடர்களில் முக்கியமானவர்கள்.

பன்னிரண்டு ஆண்டுகள் சென்னையில் வாழ்ந்த குணங்குடியாரை, இஸ்லாமியர் ஆரிபுபில்லா (இறை ஞானி), ஒலியுல்லா (இறையன்பர்) எனவும், இந்துக்கள் 'சுவாமி' என்றும் அழைத்தனர். தொண்டியைச் சேர்ந்தவர் என்பதால் மக்கள் அவரைத் தொண்டியார் என்று அழைத்ததால் அவர் வாழ்ந்த இடம் தொண்டியார் பேட்டை என்று அழைக்கப்பட்டது. பின்னர் அதுவே தண்டையார் பேட்டை ஆயிற்று.

இந்தியாவில் இருந்து உருவான சமணம், பௌத்தம், சீக்கியம் போன்ற எல்லா மதங்களையும் ஒரே பண்பாட்டு வெளியைச் சேர்ந்தவை யாக அணுகமுடியும். இம்மதங்களின் தொன்மங்கள், அடிப்படை நம்பிக்கைகள், குறியீடுகள் போன்றவை இந்துப்பண்பாடு என அடையாளப்படுத்தக்கூடிய ஒரு பொதுத் தொகுப்பில் இருந்து



வந்தவை. குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்களின் குறியீடுகள், தொன்மங்கள் போன்றவை இந்த பண்பாட்டுத் தொகுப்பில் இருந்து வந்தவையே.

தமிழகத்தில் இஸ்லாமிய ஆன்மீகத்தை பதினாறாம் நூற்றாண்டில் சதக்கத்துல்லா அப்பா மறுவரையறை செய்தார். அவர் முன்வைத்ததை தமிழ் இஸ்லாம் மரபு என்று சொல்லலாம். தமிழகத்தின் பொதுப்பண்பாட்டில் இருந்த பிற ஆன்மீக அம்சங்களுடன் ஆக்கபூர்வமான உரையாடலை மேற்கொண்டு அது உருவானது. குணங்குடி மஸ்தான் அந்தத் தமிழ் இஸ்லாமின் வழி வந்தவர்.

தமிழ் இஸ்லாமிய இலக்கியத்தில் குணங்குடியாரின் பாடல்கள் எளிமையான அழகிய கவித்துவம் கொண்டவை. மஸ்தான் சாகிபு நாயகி நாயக பாவங்களில் அல்லாவைப்பற்றி பாடியிருக்கிறார். தன் மனதின் மணியாகிய அல்லாவை 'மனோன்மணியே' என்றழைத்து, பெண்ணாக உருவகித்து தன்னை பெருங்காதலனாக வைத்து எழுதப்பட்ட அவரது பாடல்கள் புகழ்பெற்றவை. கற்பனை வளமும், கவிதை நயமும் தத்துவச் செறிவும் கொண்டவை,மெய்தழுவவும்

இருவர் மெய்யோடு மெய் நெருங்கக் கைதழுவவும் கனவு கண்டேன் மனோன்மணியே!
கூந்தல் இலங்க குரும்பைத் தனம் குலுங்க, நேர்ந்து நடம் புரிந்து நிற்பாய் மனோன்மணியே! துவளும் துடியிடையும் தோகை மயில் நடையும், பவள இதழும் என்று பார்ப்பேன் மனோன்மணியே!

கூந்தலுக்கு நெய் தோய்த்துக் குளிர் மஞ்சள் நீராட்டி வார்த்து சிங்காரித்து வைப்பேன் மனோன்மணியே!

என்னை விட்டால் மாப்பிள்ளைமார் எத்தனையோ உந்தனுக்கே உன்னை விட்டால் பெண்ணெனக்கு உண்டோ மனோன்மணியே!

குணங்குடியார் இயற்றிய பராபரக் கண்ணி மொத்தம் நூறு பாடல்களை கொண்டது. இரண்டு இரண்டடிகள்

கொண்டது. இவை தாயுமானவர் பாடல்கள் போல் செய்யுள் அமைப்பும் தத்துவக்கொள்கையும் கொண்டவை.

அண்ட புவனமென்றும் ஆடுதிருக் கூத்தினையான் கண்டு மகிழ்ந்திடவே காட்டாய் பராபரமே!

ஆதியாய் ஆண்டவனாய் அஃததுவாய் நின்றபெரும் சோதியாய் நிர்மலமாய் சூழ்ந்தாய் பராபரமே! வேத மறைப்பொருளை வேதாந்தத்து உட்கருவை ஓதி உனையறிந்தார் உண்டோ பராபரமே!

அண்ட புவனமுடன் ஆகாசமென் றுரும்பிக்கொண்டாடும் மெய்ஞ்ஞானக் கூத்தே பராபரமே!

நாவால் புகழ்க்கு எட்டா நாயகனே நாதாந்தம் பூவாய் மலர்ந்திருக்க பூத்தாய் பராபரமே!

குணங்குடி மஸ்தான் சாகிப் எழுதிய 24 கீர்த்தனைகள் உட்பட 1057 பாடல்கள் கிடைத்திருக்கின்றன. தன் குருநாதரான முஹியத்தீன் அப்துல்காதிர் ஜீலானி பற்றிய பாடல்கள் கொண்ட முகியத்தீன் சதகம் 100 பாடல்களைக் கொண்டது. முதற்கட்ட பாடல்கள் அல்லாஹ், இருள், பிரபஞ்ச உருவாக்கம் குறித்த தோற்றவியல் அறிவை விரிவாகப் பேசுகிறது. இப்பாடல்களில் அரபுச் சொற்கள், உருதுச் சொற்கள், பாரசீகச் சொற்கள் நிறைய இடம்பெற்றிருந்தன.

குருவின் சர்வ வல்லமையை போற்றிப் புகழ்ந்து, அண்ட கோடிகளுமோர் பந்தென கைக்குள் அடக்கி விளையாட வல்லீர்! அகிலம் ஈரேழினையும் ஆடும் கறங்குபோல் ஆட்டி விளையாட வல்லீர் எனப் பாடுகிறார்.


அகத்தீசன் சதகமும் 100 பாடல்களைக் கொண்டது. குருவருள்நிலை, தவநிலை, துறவுநிலை, நியமன நிலை, வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, காட்சிநிலை, தியானநிலை, சமாதிநிலை வேண்டி உருவான மனத்தின் பதிவுகளாக இப்பாடல்கள் வெளிப்படுகின்றன. அகத்தீசன் சதகத்தில்,

கொள்ளிவைத்து உடலைக் கொளுத்துமுன் முச்சுடர் கொள்ளிவைத் தருள் புரியவும் என்று வேண்டுகிறார். முச்சுடர்க் கொள்ளி என்பது யோகக்கனலைக் குறிப்பது.

இதைத் தவிர ஈரடிகளாலான கண்ணி வகைப் பாடல்களும் பல பாடியிருக்கிறார். நிராமயக் கண்ணி, பராபரக்கண்ணி, றகுமான் கண்ணி, எக்காளக் கண்ணி, கண்மணி மாலைக் கண்ணி, மனோன்மணிக் கண்ணி, நந்தீஸ்வரக் கண்ணி என்பவை அவற்றுள் சில.

குணங்குடி மஸ்தான் சாகிபுவின் பாடல்களைத் தொகுத்து பாதுகாத்து வைத்திருந்தவர் அவருடன் சமகாலத்தில் வாழ்ந்த சீயமங்கலம் அருணாசல முதலியார், தொகுத்து வெளியிட உதவியவர் சேகனாப் புலவர் என்னும் புலவர் நாயகம் அவர்கள்.

தமிழ் நூல் விவரணப்பட்டியலைத் தொகுத்த மேற்கத்திய அறிஞர் ஜாண் மார்டாக் குணங்குடி மஸ்தான் சாகிபுவின் பாடல்களின் பதிப்பு வரலாறு பற்றி குறிப்பிடும்போது இந்துக்கள் குணங்குடி மஸ்தானை தம் ரிஷிகளில் ஒருவராகக் கருதியதால் அவர் பாடல்களை திரும்பத்திரும்ப அச்சிடுகின்றனர் எனக் கூறுவதை ரா. முத்துக்குமார சாமி தனது "சூபி இலக்கியப் பதிப்புகளும் உரைகளும்" என்ற ஆய்வில் மேற்கோள்



காட்டுகிறார்.


சூஃபி மரபு இஸ்லாமின் முக்கியமான ஆன்மிக சாரம். தமிழின் சூஃபி மரபு அப்போது இருந்த பக்தி இயக்கத்தின் அழகியலை உள்வாங்கிக் கொண்டு உருவானது. குணங்குடி மஸ்தான் சாகிபுவின் மொழி நடை, செய்யுள் வடிவம், உணர்வெழுச்சி ஆகியவை பக்தி மரபை பின்பற்றுபவை. அதனால் இவரது பாடல்கள் மத எல்லைகளைக் கடந்து பக்தி இயக்கத்தின் அனைத்துத் தரப்பின ருக்கும் உவப்பானவையாக ஆயின.

சூஃபி மெய்ஞானம் நுண்மை யானது, அருவமானது. அதைச் சொல்ல வெறுமே மொழி அழகினால் மட்டுமே நிலைகொள்ளும் கவித்துவம் தேவை. பொருளின்மையைக்கூடச் சென்று தொடும் அழகாக அது இருக்கவேண்டும். குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்களில் பல இடங்களில் எளிமையான சொல்லடுக்கில் அது நிகழ்கிறது.

குணங்குடி மஸ்தான் சாகிபு ஆகஸ்ட் 6, 1838 (ஜமாதுல் அவ்வல் 14, ஹிஜ்ரி 1254) திங்கட்கிழமை அன்று வைகறை நேரத்தில் தன் னுடைய நாற்பத்து ஏழாவது வயதில் தம் உடலை உகுத்தார். இவர் தங்கியிருந்த சென்னை பழைய வண்ணாரப்பேட்டையிலேயே இவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. அங்கே இவருடைய தர்கா ஷெரீப் அமைந்துள்ளது.

அன்பு யாரிடமும் அடிமையாவதில்லை!

யார் நம்மை அவமானப்படுத்தினாலும் சிறு ஞானப் புன்னகையோடு அந்த இடத்தை விட்டு நகர்ந்து விடுங்கள். அது சாயி பக்தரே ஆனாலும் சரி. வாரிசுகளோ உறவுகளோ நம்மை அவமானப்படுத்தினாலும் அப்படியே! பாசம் அடிமைப்படுத்தும்! அன்பு சுதந்திரம் கொடுக்கும்!



எவர் பாபாவின் உபதேசங்களை பின்பற்றி வாழ்பவர்களோ அவர்களே உண்மையான பாபா பக்தர்கள்!

சிடுமூஞ்சிகள் அல்லர், சுந்தரப் புன்னகையாளர்களே சாயி பக்தர்கள்!

பாபா அன்பு காட்டத்தான் சொல்லி இருக்கிறாரே தவிர, அடிமையாக நடந்து கொள்ளச் சொல்லவில்லை!

சிடுமூஞ்சிகளிடம் இருந்து நாம் நகர்ந்து விடுவதே அவர்களை மேலும் பாவம் செய்யாத சூழலை ஏற்படுத்தும் இரக்கப்படுவது புண்ணிய கர்மா ஏமாந்து போவது பாவ கர்மா! அன்பாக இருப்பதே வீரம்! அடிமையாக இருப்பதோ கோழைத்தனம்!

எது சனாதனம்? யார் சனாதனி?



சனாதனத்தில் ஒன்றையுமே கடைபிடிக்காமல் எவ்வாறு ஒருவர் சனாதனியாக திகழ முடியும்? பிறகு எப்படி சனாதன சாரதியின் வழியில் நாம் பயணிக்க இயலும்? பிரம்ம ச்சர்யம், கிரஹஸ்தம், வனபிரஸ்தம், சன்யாசம் என்று மனித வாழ்வை வகுத்த ஒரே சமயம் சனாதனமே!

ஆனால் வனபிரஸ்த வயதிற்கு (பற்று அற்ற வயது) வந்த பிறகும் ஒருவரால் பந்த பாசங்களை உதறித் தள்ளி , உறவுகளிடம் இருந்து மனதளவில் விலகி, ஆன்மீகத்திற்குள் மூழ்க முடிவதில்லை! அதற்கான முயற்சி கூட யாரும் எடுக்கவில்லை! ஒருவரால் கூட கிரஹஸ்தாஸ்ரமத்தை (இல்லறத்தை) மனதளவில் கூட தாண்டுவதில்லை!

வெறும் பெயரளவில் ஆன்மீகம், வாயளவில் சனாதனம் என்பது ஒருநாளும் ஆன்ம நன்மையை நமக்கு தருவதே இல்லை! மனத்தால் பக்குவப்பட்டவன் எவனோ அவனே சனாதனி! பரந்து விரிந்த பேரன்போடு பேதமின்றி பிரபஞ்சத்தையே அரவணைப்பவன் எவனோ அவனே சனாதனி! தியாகிகளாலேயே சனாதனிகளாகத் திகழ முடிகிறது! சுயநலவாதிகளால் அல்ல!

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

தொடர் –29

சாய் சரவணன்

"அதி தேவதை"

சாயிநாதர் குசபாவை அடிக்க ஆரம்பித்தவுடன் பக்தர்கள் நாலாபுறமும் சிதறி ஓட ஆரம்பித்தனர்.

அதன் பிறகு சற்று நேரத்தில் சாயி அமைதி அடைந்தார். மனம் நெகிழ்ந்த மனதோடு பாபா குசபாவ்வை அருகில் அழைத்து கூறினார். "நான் உனக்கு இப்போது ஒரு வரம் அளிக்கிறேன்! இப்போது முதல் என்னை மனதில் நினைத்து நீ உனது உள்ளங்கைகளை நீட்டினால் மசூதியில் உள்ள இந்த துனியிலிருந்து சூடான உதி வரும். அந்த உதியை எல்லோருக்கும் தாராளமாக வழங்கு. அது அநேக நன்மையளிக்கும். உனக்கும் புண்ணியம் கிட்டும்" என அற்புதமான வரம் அளித்தார்.

இந்த வரத்தை பாபாவிடம் இருந்து பெறுவேன் என்பதை நினைத்துக் கூட பார்க்கவில்லை என மனம் மகிழ்ந்தார் குசபாவ். ஜனார்த்தன சுவாமி ஏகநாதரின் பக்திக்கு பலனாக தத்தரை தரிசிக்க வைத்தார். ஆனால் அதே பிரபுவான தத்தர் ஸ்ரீ சாயிநாதர் குசப்பாவிற்கு மிகச்சிறந்த வரத்தை அளித்தார். பிறகு சில நாட்கள் கழித்து பாபா குசபாவ்வை ஷீரடியை விட்டு வெளியேறச் சொன்னார். குசப்பாவ் கிளம்பும் போது பாபா "நீ மீண்டும் ஷீரடிக்கு வரும் போது இருவராக வாருங்கள் என ஆசிதந்தார்".

அதாவது குசப்பாவ் திருமணம் புரிந்த மனைவியுடன் ஷீரடிக்கு வர வேண்டும் என்பதே ஆகும். பாபா இந்த



ஆசிகளை வழங்குவதற்கு முன்னாள் இராதாகிருஷ்ணமாயியும் திருமணம் செய்து கொள் எனும் ஓர் குறிப்பை தருவது போல குசப்பாவின் கையில் அட்சதையை தந்தார்களே!

இது எல்லாம் அற்புதமான கதை. குசப்பாவும் சீரடியை விட்டுச் சென்றார். பாபாவின் வரமானது குசப்பாவின் மூலம் பல பேருக்கு நன்மை அளித்தது. குறிப்பாக பி.ஆர். அவஸ்தி என்னும் அடியார் அதிக பலன் அடைந்தார். அவஸ்தி என்பவர் பிற்காலத்தில் பாபாவின் மிகப்பெரிய பக்தர் ஆனார். மேலும் இராதாகிருஷ்ண மாயியின் குழந்தையும் ஆனார்.

ஸ்ரீ சாயிநாதருடைய பெருமைகளை எவராலும் கூற இயலாது. அவரே சத்து சித்து ஆனந்த ரூபமாய் இந்த உலகமாய் வீற்றிருக்கிறார். அவருடைய மகத்துவத்தை எவரும் அறிய இயலாது. பார்ப்பதற்கு எளிய

பாழடைந்த மசூதியில் பகீர் போல வாழும் அவருடைய கருணை நம் மேல் விழுந்தால் தான் அவரது அன்பை பெறும் பாக்கியத்தை அடைவோம்.

அப்படியாக எண்ணற்ற பக்தர்கள் பாபாவின் தரிசனம், அவரோடு பழகும் பாக்கியம் பெற்றிருப்பினும் எதற்காக அவரிடம் சென்றோம், எதற்காக அவரிடம் உறவாடுகிறோம் என்ற கூர்ந்த நோக்கத்தை அடியோடு பலர் மறந்து போயினர். ஆயினும் பாபாவின் மூலம் பல அனுபவங்களையும், பாதுகாப்பையும் பெற்றனர். நாம் சாயி சத்சரிதையில் பாபா ஒருவருக்கு பாண்டுரங்கனாக, ஸ்ரீ ராமராக, ஸ்ரீ விநாயகனாக, ஸ்ரீ தத்தராக, பிற குருமார்களாக காட்சித் தந்த லீலைகளை படித்திருப்போம்.

இத்தகைய தரிசனம் பெற்றவர்கள் அத்தகைய பெரும் பாக்யத்தை அடைந்தாலும் யோக அவதாரமான ஸ்ரீ சாய்நாதர் வாழும் புண்ணிய பூமியின் மகத்துவத்தைப் பிறருக்குக் கூறி சாயியின் தரிசனம் கிட்டும் படி செய்தார்கள். ஆனால் சாயிநாதரே ஸ்ரீ ராமர் ஆகையால் சீரடியை அயோத்தியாக மாற்றி ஸ்ரீ சாயிராமனை மகாராஜாவாக மாற்ற வேண்டும் என்ற எண்ணம் எவருக்கும் வரவில்லை.

அத்தகைய பாக்கியம் எவருக்கும் கிட்டவில்லை. அந்த பரம பாக்யத்தை சீரடி பண்டரிபுரமாக மாற்றம் செய்ய குரு பக்தியை விதைத்து அதை முளைக்க வைத்திட பிரேம பக்தியின் வடிவமே ஆன இராதா கிருஷ்ண மாயியையே பாபா தேர்ந்தெடுத்தார்.

இதை நாம் இந்நூலில் கண்கூடாக கண்டு வருகிறோம்! ஸ்ரீ இராதா கிருஷ்ணமாயியின் மஹாசங்கல்பத்தை நாம் நன்கு அறிவோம். சீரடி பண்டரிபுரமாக மாற்றி பக்கீரான சாயி நாதரை மகாராஜாவாக மாற்றி அவரது பெருமை, மகத்துவம், கீர்த்தியாவும் இவ்வுலகம் அறிய வேண்டும். அதற்காக ஷீரடியில் பல விழாக்கள் கொண்டாடப்பட வேண்டும். ஊர்வலங்கள், நான்கு வேளை ஆரத்திகள், சகலவிதமான உபச்சாரங்களுடன் பாபாவிற்கு ராஜ மரியாதையுடன் பூஜைகள் நடைபெற வேண்டும்.

விரைவில் சீரடி மிகப்பெரிய சனஸ்தானாக உருவாக வேண்டும் என்ற. சங்கல்பத்தை நிறைவேற்ற ஆயி சாயி யோடு இணைந்தே சற்றும் அயராது உழைக்க வேண்டியதாயிற்று. நாம் இதுவரை ஷீரடியில் இராதாகிருஷ்ணமாயி பாபாவின் அருளால் என்னென்ன சீர்திருத்தங்களை உருவாக்கினாள் என்பதைக் கண்டோம். "குருபூர்ணிமா அன்னதான சேவை" இந்த இரண்டு சங்கல்பமும் எப்படி பாபாவின் அருளால் ஆயி நிறைவேற்றினாளோ அதே போல் இராதாகிருஷ்ணமாயி இப்போது மிக முக்கியமான சங்கல்பத்தை செய்திட ஆயத்தம் ஆனாள்!

ஷீரடியில் துவாரகாமாயியில் நடக்கும் வழிபாட்டு முறையை மாற்றி கூட்டு வழிபாட்டு முறையாக மாற்றம் செய்ய சங்கல்பித்தால் ஆயி! (அதாவது தனித்தனியாக பக்தர்கள் பாபாவை வணங்கிய முறைதனை மாற்றி, பக்தர்கள் ஒன்று கூடி ஆலயங்களில் தெய்வத்தை வணங்குவது போல, பாபாவையும் வணங்கிட கூட்டு வழிபாட்டு முறையை நடத்திட எண்ணம் கொண்டாள் ஆயி) பலமுறை பாபா ஆயியைக் கண்டாள் கோபப் படுவது போல் பாசாங்கு

செய்வார். மறைமுகமாக ஆயியின் எண்ணங்கள் நிறைவேற ஆசிகளும் தருவார்.

மகல்சாபதியின் தலைமையில் தான் பாபாவிற்கு தனி தனிநபர் வழிபாடு நடந்து வந்ததை நாம் ஏற்கனவே கண்டிருப்போம். மஹல்சாபதியை சாயியின் பூஜை வழிபாட்டு முறையில் அதிகமாக கவனத்தை செலுத்தும் படி அவரை ஊக்குவித்தது நம் இராதாகிருஷ்ண மாயியே! ஆயி என்ன சொன்னாலும் மகல்சாபதி அதைச் செய்வார். காரணம் அவர் ஆயியின் மீது கொண்ட நல்ல மதிப்பே ஆகும்.

பகவானின் பக்தர்கள் எதை சங்கல்பித்தனரோ அதை முடிக்க பகவான் அருள்புரிந்தே தீருவான். பகவானின் விரதமும் அதுவே. நாமதேவர் விட்டலனின் பிரேமபக்தர் ஒரு முறை யாரோ ஒருவர் ஸ்ரீ ராமரின் மேல் நூறு ஆயிரம் அபங்கம் எழுதியதை கேட்டு, அப்படியானால் என் பாண்டுரங்கன் மீது நூறுகோடி அபங்கம் எழுதுவேன் என சங்கல்பம் பூண்டார்.

ஸ்ரீ பாண்டுரங்கனும் அருள் செய்யவே 95 கோடி அபங்கமே நாமதேவரால் எழுத முடிந்தது. மீதம் உள்ள 5 கோடி அபங்கம் எழுத நாமதேவர் மறுபிறவி எடுத்து துகாராமாக வந்து தன் சங்கல்பத்தை நிறைவேற்றினார் என்கிறது மஹாபக்த விஜயம்! இத்தகைய பிரேம பக்தனை போலவே நம் இராதாகிருஷ்ணமாயியின். சங்கல்பங்களை ஸ்ரீ சாயிநாதர் நிறைவேற்றவே செய்தார்.

இப்போது ஷீரடியில் பாபாவிற்கு கூட்டு வழிபாடு நடத்த முடிவு செய்து அதை பாபாவின் அடியார்களிடம் கூற விரும்பினாள் ஆயி! ஆயி பாபாவின்



அடியார்களிடம் சென்று "கூட்டு வழிபாட்டு முறையை" பற்றி தெளிவான கருத்தை வெளியிட்டார். கண்டோபா கடவுளுக்கு எப்படி மகல்சாபதி பூஜை செய்து அதனால் பொதுமக்கள் பயன் அடைகிறார்களோ, அதைப் போல் நடமாடும் பகவானே ஆன ஸ்ரீ சாயிநாதருக்கு ஒருவர் பூஜை செய்து அதனால் பொதுமக்கள் பயன் அடையும் படியான கூட்டு வழிபாடு பற்றி விளக்கமாக ஆயி கூறினாள். சில அடியவர்கள் ஆயியின் யோசனைக்கு உடன்பட்டனர்.

எனினும் யார் பாபாவிற்கு முறைப்படி பூஜை செய்வார் எனும் கேள்வி எழுந்தது. ஆயியோ தாங்கள் யாவரும் சம்மதம் கூறினால் அதற்கான தகுந்த ஆளை பாபாவே ஷீரடிக்கு இழுப்பார் என்றும், வழிபாட்டிற்குரிய எல்லா பொருட்களையும் நானே தயார் செய்வதாகவும் இராதாகிருஷ்ணமாயி கூறினாள். அடியவர்களும் முழுமனதோடு ஏற்றுக்கொண்டனர்.

அப்படிப்பட்ட கால சூழ்நிலையில் தான் ஆயியின் சங்கல்பத்தை நிறைவேற்ற பாபா அற்புத லீலை ஒன்றை நிகழ்த்தி மேகாவை சாயிநாதர் ஷீரடிக்கு இழுத்தார்! – தொடரும்.

உடல் உறுதிக்குப் பயன்படும் முருங்கைக்காய்!


இந்தியர்களின் உணவில் அதிக அளவில் இடம் பெறும் முருங்கைக்காய், நல்ல மருத்துவக் குணங்களும் ஊட்டச்சத்துகளும் இரும்புச்சத்தும் நிரம்பிய முக்கியமான காய்கறியாகும்.

இதயம், நரம்பு மண்டலம், இரத்த ஓட்டம் முதலியவை சிறப்பாக இயங்க மிகச்சிறந்த ஊக்க உணவாக முருங்கைக்காய் திகழ்கிறது. குறிப்பாக, பிஞ்சு முருங்கைக்காயை சமைத்து உண்டால் மேற்கண்ட நன்மைகள் நிச்சயம் உண்டு. இதன் சதை, எளிதில் செரிமானம் ஆகக்கூடியது.

இந்தியாவைத் தாயகமாகக் கொண்டது, முருங்கைக்காய். இதன் விஞ்ஞானப் பெயர், மோரிங்கா ஒலிஃபெரா என்பதாகும்.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளில் இது நன்கு விளைகிறது. தமிழ் நாட்டில் நீள நீளமாய்க் கிடைக்கும் முருங்கைக்காய் யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு வரப்பட்டு இங்கே பயிரிடப்பட்ட மரமாகும். 100 கிராம் முருங்கைக்காயில் கிடைக்கும் கலோரி 26 ஆகும். இக்காயில் கால்சியம், பாஸ்பரஸ், வைட்டமின் சி, முதலியனவும் போதுமான அளவில் உள்ளன.

ஆறிலிருந்து அனைத்துவயதினரும் தினமும் முருங்கைக்காய் சாப்பிடலாம். கெடுதல் எதுவும் ஏற்படாது; மாறாக நன்மைகள் அதிகம்! நோய்க்கிருமிகளை அண்டவிடாது பார்த்துக்கொள்ளும் ஆற்றல் இந்தக் காய்க்கு அதிகம் உண்டு. இதை உண்பவரின் உடல் உறுதியும் ஆரோக்கியமும் தொடர்ந்து பாதுகாக்கப்படும். இக்காயில் எல்லாவிதமான அமினோ அமிலங்களும் உள்ளன.



எளிதில் தொற்றக்கூடிய பாக்டீரியாக்களைக் கூட 'என்ன சேதி' என்று கேட்டு, நம் உடலுக்குள் நுழையவிடாமல் தடுத்துவிடும்.

பெனிசிலின் மருந்துக்கு இணையானது, முருங்கைக்காய்! ஆஸ்துமா, இதய நோய் முதலியவற்றைத் தடுக்க முருங்கைக்காய்ச்சாம்பார், முருங்கைக்கீரை அவியல் முதலியவற்றை இயன்றபோதெல்லாம் சாப்பிடவேண்டும்.

முருங்கைக்காயைப் போலவே முருங்கைக்கீரையும் முருங்கைப் பூவும் மருத்துவக் குணங்கள் நிரம்பியவை.

பிறந்த குழந்தை நன்கு வளர

கைக்குழந்தையின் எலும்புகள் உறுதியுடன் வளர, முருங்கைக் கீரையைச் சாறாக மாற்றி, வடிகட்டி, அதைப் பாலுடன் சேர்த்துக்

கொடுக்கலாம். அந்த அளவுக்கு ஆரோக்கியத்தைத் தரும் மிகச் சிறந்த டானிக் இது.

பிரசவம் எளிதாய் நடைபெற

இந்த டானிக்கை கர்ப்பிணிகள் தினமும் அருந்தினால் அவர்களுக்குத் தேவையான சுண்ணாம்புச்சத்து, இரும்புச்சத்து, வைட்டமின்கள் போன்றவை கிடைத்துவிடும். மேலும், மெல்ல மெல்லக் குழந்தையை நகர்த்திக்கொண்டு வந்து பிரசவத்தை இலகுவாக்க இதில் உள்ள இரும்புச்சத்து பயன்படுகிறது. எனவே முருங்கைக்கீரையைப் பயன்படுத்துகிறவர்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் ஆரோக்கியமாகக் குழந்தை பிறந்துவிடும்.

தாய்ப்பால் நன்கு சுரக்க

குழந்தை பிறந்ததும் தாய்ப்பால் நன்கு சுரக்க, முருங்கைக் கீரையைத துவரம் பருப்புடன் பொரியல் செய்து, பசு நெய் கலந்து சாப்பிட வேண்டும். இதனால் குழந்தைக்குத் தாய்ப்பால் பஞ்சமில்லாமல் கிடைக்கும். தாயின் உடல் நலமும், கணவனின் பணமும் வீணாகாமல் இருக்க, முருங்கைக் கீரையைப்போல் வேறு எதுவும் பயன்படுத்துவதில்லை!

ஆண்மை விருத்திக்கு

ஆண்கள், மேற்கண்ட பொரியலை இரு மாதங்கள் தினமும் ஒருவேளை உணவுடன் சேர்த்து உண்டால் ஆண்மை விருத்தியாகும்! உடல் வலுவடையும். முருங்கைப் பூக்களைப் பாலில் கொதிக்க வைத்துத் தினமும் 'சூப்' போல் ஆண்கள் அருந்தினால் விந்து விருத்தி ஏற்படும். சிறுநீர் தடையின்றிச் செல்லவும், உணவு நன்கு செரிமானம் ஆகவும், முருங்கைக் காயையும், முருங்கைக் கீரையையும் நன்கு பயன்படுத்த வேண்டும்.

நீரிழிவு நோயாளிகள், முருங்ககைக் கீரையில் எள் சேர்த்துச் சமைத்து உண்டால், நீரிழிவு கட்டுப்படும். சொறி, சிரங்கு ஆகியன உள்ளவர்களுக்கு இக்கீரை அருமருந்து. இதில் உள்ள வைட்டமின் 'சி' யே இதற்குப் பயன்படுகிறது. இரத்த விருத்திக்கு இதில் உள்ள இரும்புச்சத்து பயன்படுகிறது. வாயுக் கோளாறுகளை முருங்கைக்காய் போக்குகிறது.

காலரா, வயிற்றுப்போக்கு, குடல் அழற்சி, மஞ்சள் காமாலை ஆகியவை குணமாக, ஒரு தேக்கரண்டி அளவு இளந்தளிரான கீரையின் சாற்றுடன், சமஅளவு தேன் சேர்த்து, அதை ஒரு டம்ளர் இளநீருடன் கலந்து ஒரு நாளைக்கு மூன்று வேளை வீதம் அருந்தக் குணம் தெரியும்.

பித்தக் கோளாறுகளும், கண் தொடர்பான நோய்களும் நீங்க, முருங்கைக்காய் பொரியல் பயன்படும். ஆயுர்வேத மருத்துவத்தில் முக்கியமருந்தாய் உள்ள முருங்கைக் காயும் கீரையும் மிகச்சிறந்த நோய் தீர்க்கும் மருந்து என்பது மறுக்கவியலாத உண்மை.

100 கிராம் கீரையில் 108 கலோரி கிடைக்கிறது. கால்சியம் 440 மில்லிகிராமும், பாஸ்பரஸ் 70 மில்லி கிராமும், இரும்புச்சத்து 7 மில்லிகிராமும், வைட்டமின் பி காம்ப்ளஸ் சிறிதளவும் உள்ளன. எனவே, ஆரோக்கியமான உடல் கட்டுத் தேவைப்படுவோர்கள் கீரைக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

உடல் சூட்டுடன் மூளை வளர்ச்சியும் நன்கு சிந்திக்கும் திறனும் வேண்டும் என்பவர்கள், 100 கிராம் முருங்கைக்காயில் கிடைக்கும் 100 மில்லிகிராம் பாஸ்பரஸை பயன்படுத்திக்கொள்ள தினமும் உணவோடு முருங்கைக்காயையும் கீரையுடன் சேர்த்து அறிவுத்திறனை வளர்த்துக்கொள்ளுங்கள்!

தொடர் –6

சுந்தர்சாய்

திருவருள் தேடி

ஓம் சாய்ராம்.

நமது சாய் அன்பர்களை வணங்கி என் வாழ்வில் மலர்ந்த, திருவருள் தேடிய அனுபவத்தில், நவம்பர் மாத இதழில் ஏற்பட்ட திருப்பு முனையாக எனது பயண வேலையில் சேர்ந்த சில நாட்களில் தொடங்கிய ஆப்கானிஸ்தான் போரும் அதைப் பற்றிய தொலைக்காட்சி ஒளிபரப்பு கள் கிளப்பிய பீதியும், எமது குடும்பத்தினரை நிலைகுலையச் செய்துவிட்டது.

ஆகையால் என்னை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, உடனடியாக ஊர் திரும்பச் சொல்லி பதறிய சூழ்நிலை என்னை சற்றே அசைத்துப் பார்த்தது. அமெரிக்க போர் விமானங்கள் நான் வேலை செய்து கொண்டிருந்த நாட்டிற்கு அருகிலே நிறுத்தப்பட்டதும், எரிபொருள் நிரப்ப அடிக்கடி வந்து போவதுமாக இருக்க, அதுவே ஒரு பெரிய செய்தியாக திரும்பத் திரும்ப ஒளிபரப்பி ஒரு பரபரப்பை ஏற்படுத்தி கொண்டிருந்தது.

நான் ஒருவழியாக சுதாரித்துக் கொண்டு என்னை இந்த வேலைக்கும், நாட்டிற்கும் அனுப்பிய சாய்பாபா எந்தவித ஆபத்திலிருந்தும் நிச்சயம் காப்பாற்றுவார் என்றும், சிலாங்கூர் பாலாஜி திருவருள் நிச்சயம் செய்த இந்த வேலையை விடுவதாக உத்தேசமில்லை என கண்டிப்பாக தெரிவித்து அவர்களையும்



தைரியமாக இருக்கச் சொல்லி அமைதிப்படுத்தினேன்.

இறை நம்பிக்கையில் எம்மை அசைத்துப் பார்த்து, தேர்ச்சியளித்த அந்த அனுபவம் எமக்குத் தந்தது மிகப்பெரிய பாடம். மெல்ல மெல்ல இச்சம்பவத்தின் மூலம் என் மனம் பக்குவமடைவது தெரிந்தது.

வாரம் ஒருமுறை கடிதம் எழுதி இந்திய தூதரக அலுவலகத்தில் கொடுத்தால் அந்தக் கடிதம் தபால் மூலம் எமது இல்லத்திற்கு அனுப்பப்படும் வசதியும் சாய்நாதர் கிருபையால் எமக்கு கிடைத்தது. அவற்றில் ஒன்றிரண்டு புகைப் படங்களை வைத்து நான் இங்கு,

பாதுகாப்பாகவம், நல்ல நிலையில் இருப்பதையும் தெரிவிக்க முடிந்தது

அக்காலகட்டத்தில் வீடியோ கால், கைப்பேசி எல்லாம் இந்தியாவில் மிகப்பெரிய வசதியானவர்களுக்கு மட்டுமே எட்டிய விஷயம். இணையத்தள வசதி ஓரிரு இடங்களில் மட்டும் இருந்தது. ரஷ்யாவில் தொலைப்பேசியில் 'கால் புக்' செய்து பேசுவதும் சிரம்மமாகத்தான் இருந்தது.

ஒரு வழியாக அங்கு எல்லா வகதமான கடுமையான சூழ்நிலைகளையும் சமாளித்து வேலையில் கவனம் செலுத்தியது எனக்கு ஒரு தன்னம்பிக்கைப் பாடம் என்றே புரிந்தது. பாபா இருக்க பயம் ஏது? என்ற நம்பிக்கை மலர்ந்த தருணம் அதுவே! இன்றளவும் அந்த நம்பிக்கை நிலைக்க திருவருளாய் துணை நிற்கும் 'குருவருளே எம் சொத்து'.

இதையெல்லாம் கடந்து எமது வேலையிலும் பலவிதமான சவால்களையும் சந்திக்க எமக்கு துணை நின்றது யார்? அதுவும் முற்றிலும் புதிய சூழ்நிலை. அந்த நாட்டில் உள்ள 'கரன்சி' எனப்படும் பணத்தை அமெரிக்க 'டாலர்' க்கு மாற்றுவது மிகப்பெரிய சவால். அந்த அரசாங்கத்தில் டாலர் கையிருப்பு ரேஷன் மூலம் தான் நமக்கு கிடைக்கும்.

எனவே எமக்கு கிடைக்கும் அற்பத் தொகையில், எல்லா செலவுகளை யும் சமாளிக்க வேண்டும். அங்கிருந்து வெளிநாட்டிற்கு பணம் அனுப்பமுடியாத நிலை. வேலை கிடைத்தாலும், கூலி கிடைக்காத சூழல் என்னை மிகவும் அச்சுறுத்தியது.

எந்த விற்பனையும் அரசாங்கத்தில் அனுமதி பெற்ற 'கான்ட்ராக்ட்' மூலமும் அவர்கள் நாட்டு கரன்சி மூலமும் தான் செய்ய வேண்டும். கோடி கோடியாய் வியாபாரம் செய்தாலும் அவையனைத்தும் அந்த நாட்டை விட்டு வெளியே கொண்டு வர முடியாது.



அவர்களுடைய பணத் திற்கு வெளிநாடுகளில் மதிப்பே இல்லை. மேலும் ஹோட்டல்களில் உணவருந்தினாலும் கட்டு கட்டாய் பணம் செலுத்த வேண்டும். அந்த அளவிற்கு பணமதிப்பு குறைவு. அங்கு அரசாங்கத்துடன் கூட்டுறவு முறையில் எமது மருந்து தயாரிக்கும் தொழிற்சாலையில் அதிகபட்சமாக நாங்கள் சுமார் 8 பேர் உயர்பதவிகளில் மற்றும் அந்த நாட்டு பிரஜ்ஜைகள் என சுமார் 200 பேர் வேலையில் இருந்தோம்.

எங்களுக்கு (இந்தியர் களுக்கு) சம்பளம் டாலராக கொடுக்க ஒப்பந்தம். அந்த பிரஜ்ஜைகளுக்கு ரஷ்ய பணம் சம்பளம். எனவே அவர்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால் எங்களுக்கு 10% டாலர் கிடைப்பதே பெரும்பாடாய் இருந்தது. ஏனென்றால் அரசாங்கம் கோட்டா முறையில்

டாலராக மாற்ற ரேஷன் செய்தது.

எவ்வளவு தான் முனைந்து விற் பனையைக் கூட்டினாலும் கிடைப்பது என்னவோ, அந்த நாட்டு பணம் தான். அதுவும் அவர்களது வங்கிக் கணக்கில் கோடி கோடியாய் மாற வருடக் கணக்கில் காத்திருக்க வேண்டும்.

நமது இந்திய உறவுகள் அங்கே எம்முடன் சேர்ந்து இந்த சவால்களை சந்தித்தது எமக்கு மிகப்பெரிய மன உளைச்சலை உண்டாக்கியது. அந்த சூழ்நிலை யில் ஒரு புதிய உத்தியைக் கையாள வேண்டிய கட்டாயத்தில் நான் இருந்தேன். ஏனென்றால் வெளிநாட்டு வர்த்தக மேலாளராக இருந்த நான் பண உற்பத்தியில் முதல் பொறுப்பில் இருந்த நான் சாய்பாபாவிடம் பிரார்த்தனை செய்தேன்.

வெளிநாடு சென்று முதல் இரண்டு மாத சம்பளம் சரியாக கிடைத்தது. அதை வைத்து அடுத்து ஆறு மாதங்கள் சமாளிக்க வேண்டிய நிலை. எனக்கு உள்நாட்டுப் பணம் கைச்செலவிற்கு போதுமானதாக இருந்தது. ஆனால் இங்கு நாங்கள் அனைவரும் குடும் பத்திற்கு பணம் அனுப்ப வேண்டும். அதற்கு தேவையான டாலர் 6 மாதங் கள் வரையில் எங்களுக்கு கிடைக்க வில்லை. புரியும்படி சொன்னால் கடல் அளவு தண்ணீர் இருந்தும் குடிப்பதற்கு கையளவு தண்ணீர்கூட இல்லாத சூழல்.

உடன் வேலை செய்யும் இந்திய சகோதரர்கள் எமது முகத்தை பார்க்க ஆரம்பித்தவுடன் தான் எனக்கு உரைத்தது. நாம் தான் ஏதாவது செய்ய வேண்டுமென்று. நாம் என்றால், நம் சாயிதான், நம்பியவரை என்றும் கைவிடாத சத்யசாய் பகவான்.

உடனே செய்த மாயம் தான் என்ன என்பதை தெரிந்து கொள்ள அடுத்த ஆண்டில் 2024 ஜனவரியில் தொடர்வோம். அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்களுடன்..

எல்லாம் சாய்! எல்லாமுமே சாய்!!

குரு வாழ்க! குருவே துணை!!

– தொடரும்.

"பற்று"



துறவு என்பது குடும்பத்தை துறப்பதல்ல. குடும்பத்தின் மேல் உள்ள பற்றைத் துறப்பதே! "அன்பு வைத்தேன்! வலியே மிஞ்சியது!" என்று சிலர் வருத்தப்படுவர்! அவர்களை அன்பு காயப்படுத்துவதில்லை , எதிர்பார்ப்பே காயப்படுத்துகிறது! எதிர்பார்த்தபடி காட்டுகிற அன்பு அன்பே இல்லை! அது வெறும் பற்றே!

தீ எழுகிற போது, அதைப் "பற்றிவிட்டது" என்றே அழைக்கிறோம்! தீ சுடும். ஏனெனில் அது பற்றுகிறது! எதிர்பார்ப்பும் சுடுகிறது, ஏனெனில் அதிலும் "பற்று" இருக்கிறது! "என்னை யாரும் புரிந்து கொள்ளவே இல்லை!" என்று வருத்தப்படுகிறோம்! அதற்குக் காரணமும் எதிர்பார்ப்பே! பற்றை முதலில் நாம் துறக்கிற போதுதான் நம்மை நாமே புரிந்து கொள்ள முடியும்

தான் துறவி என்கிற எண்ணத்தையும் சேர்த்து எவர் துறக்கிறாரோ, அவரே உண்மையான துறவி! துறவு சுலபம்! அதற்குத் தடை இந்த உலகம் அல்ல. நமது மனமே! சாகப் போகிற மனிதன் சாகப் போகிற உறவுகளுக்காக சங்கடப்படுவதை விட வேறென்ன மாயை இந்த உலகில் இருக்கிறது? பற்றே அடிமைத்தனம்! துறவே ஆன்மாவுக்கான விடுதலை! நமக்குள் துறவு எழாத வரை ஆன்மீகத்தில் ஒரு அடியைக் கூட நம்மால் எடுத்து வைக்க முடியாது!

துன்பம் வருவது நல்லதுக்கே



எப்படியோ துன்பம் வந்து விடுகிறது. நம் பிழை என்று இல்லாவிட்டாலும் ஏதோ ஒரு விதத்தில் துன்பம் வந்து நம்மை வேதனை செய்கிறது. துன்பம் வந்து விட்டால், தளர்ந்து போகிறோம். என்ன செய்யப் போகி றோம், இதில் இருந்து எப்படி மீள்வது என்று தவிக்கிறோம்.

துன்பமே இல்லாத வாழ்வு இருக்கக் கூடாதா என்று ஏங்குகிறோம். இன்பம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை , இந்த துன்பம் வரமால் இருந்தால் சரி என்று நினைக்கிறோம்.

நாமாவது இந்த உலக வாழ்க்கையில் ஈடுபட்டு, ஏதேதோ செய்கிறோம். தெரிந்தோ தெரியாமலோ தவறு நிகழ்ந்து விடலாம். தெரியாமல் யாரையாவது மனம் புண்பட பேசி இருப்போம். தெரிந்து அல்ல, தெரியாமல்.

ஒன்றை தெரிந்து கொள்ளுங்கள். தெரியாமல் குடித்தால் நஞ்சு நம்மைக் கொல்லாதா. செய்த வினைக்கு மறு வினை வரும் தானே? அப்பர், சுந்தரர்,மணிவாசகர், அருணகிரிநாதர், இரமணர் போன்ற பெரியவர்களே படாத பாடு பட்டிருக்கிறார்கள்.

சிறு வயதில், சைவ சமயம் விட்டு, சமண சமயத்தில் சேர்ந்து விட்டார் அப்பர். அவருடைய தமக்கையார், . திலகவதியார் ஒரு நாள் சிவனிடம் முறையிட்டார்."என் தம்பி இப்படி போய் விட்டானே, அவனுக்கு நல்ல புத்தியை கொடுத்து நீ தான் அவனை நல் வழிப் படுத்த வேண்டும் " என்று மனம் உருகி வேண்டினார்.

சிவன், அவருடைய கனவில் வந்து சொன்னார், "உன் தம்பி

முன்பே என்னை நோக்கி தவம் செய்திருக்கிறான். அவனுக்கு சூலை நோயை கொடுத்து யாம் அவனை நல்வழிப் படுத்துவோம்" என்று.

சிவன் நினைத்தால், நாவுக்கரசரை மனம் மாறச் செய்ய முடியாதா? தாங்க முடியாத வயிற்று வலியை கொடுத்தார். நாவுக்கரசர் வலி தாளாமல் துடித்தார். அந்த வலி வந்ததால், அவர் தன்னுடைய தமக்கையை நோக்கி வந்தார். பின் சைவ சமயத்தை வந்து அடைந்தார். தேவாரம் பாடினார். செய்தி அதுவல்ல.

துன்பம் வரும் போது, தோல்வி வரும் போது தவிக்கிறோம். துவள்கிறோம். அது எல்லாம் சரி. அந்த துன்பம் கூட, தோல்வி கூட ஏதோ ஒரு பெரிய நன்மைக்கு என்று நாம் நினைக்க வேண்டும்.

தோல்வியை கண்டு துவண்டு விடக் கூடாது. ஏதோ ஒரு மிகப் பெரிய வெற்றியைத் தரவே இறைவன் இந்த துன்பத்தை நமக்குத் தந்திருக்கிறான் என்று நினைக்க வேண்டும்.

சுடு மணலில் , செருப்பு இல்லாமல் நிற்க வைத்தார்கள் மணி வாசகரை.

தாள முடியாத வயிற்று வலியால் துன்பப்பட வைத்தார் நாவுக்கரசரை.

அந்தத் துன்பங்களுக்கு பின்னால், அவர்கள் பக்தி உலகுக்குத் தெரிந்தது.

ஏதோ ஒன்றை வெளிக் கொணரவே துன்பங்களும், தோல்விகளும், அவமானங்களும் வருகின்றன என்று நம்ப வேண்டும். அவற்றை வென்று முன்பு இருந்ததை விட பெரிய , உயரிய நிலைக்குப் போக வேண்டும்.

பரீட்சை வைத்துதானே மார்க் போட முடியும். மார்க் வாங்கினால் நல்ல பலன் கிடைக்கும்.ஐயோ பரீட்சை வந்து விட்டதே என்று அலறினால் என்ன அர்த்தம். கொஞ்சம் படித்தவுடன் , ஒரு பரீட்சை வரும்.

அதில் தேறினால், மேலும் படிக்கலாம், அதில் இன்னொரு பரீட்சை வரும். பரீட்சை கொஞ்சம் கடினம் தான். இருந்தாலும் படிக்க வேண்டும், எழுத வேண்டும்.

வாழ்க்கையும் அப்படித்தான். அப்பப்ப சோதனைகள் வரும்.சோதனை வரும் என்று எதிர் பார்த்து அதற்கு நம்மை தயார் செய்து கொள்ள வேண்டும்.

ஒன்றும் படிக்காமல் பரீட்சை எழுதப் போனால், நடுக்கம் வரத்தான் செய்யும்.

அடுத்து என்ன சோதனை வரும் என்று எண்ணிப் பாருங்கள். அதை எப்படி சமாளிப்பது என்று திட்டம் போடுங்கள்.

நம்மை தினமும் தயார் செய்து கொண்டே இருக்க வேண்டும்.

அப்படி செய்தால், எளிதாக தேர்ச்சி பெற முடியும். இல்லை என்றால், கையில் வினாத்தாளை வைத்துக் கொண்டு திரு திரு என்று முழிக்க வேண்டியதுதான்.

துன்பம் வரும் வேளையில் சிரிங்கனு சொல்வாங்க, சிரிக்க கூடாது.

துன்பம் வரும் வேளையில் சாயிராமா என்று சிந்திக்க வேண்டும்.

வாழ்க வளமுடன்.

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் "குகஸ்ரீ குமாரஸ்தவம்" இராமானுஜம் சுவாமிகளின் வாழ்க்கை வரலாறை அறிந்து கொண்டு சுவாமிகளின் சீவ பீட ஆலயத்தை தரிசிப்போம் வாருங்கள்.

குகஸ்ரீ குமாரஸ்தவம்

சென்னை மாநகரில் பலநூறு சித்தர்கள் வாழ்ந்து மறைந்து இறை யுடன் கலந்து இன்று சீவபீட ஆலயங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் சித்தர்களில் நமது சித்தர் "குகஸ்ரீ குமாரஸ்தவம்" இராமானுஜம் சுவாமிகளும் ஒருவர்.

சுவாமிகள் தென்னக இரயில் வேயில் வேலை செய்து வந்தார். அப்போது அவருக்கு திடீரென உடல் நலம் பாதிக்கப்பட்டு, மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டிருக்கி ன்றார். அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவருக்கு உடனடியாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று முடிவெடுத்து நாளும் குறித்து விட்டார்கள்.

அன்றிரவு மருத்துவ மனையில் அவரது படுக்கைக்கருகே திடீரென ஒரு மனிதரைக்கண்டார். அவர் நம் சுவாமிகளிடம், குமாரஸ்தவம் என்ற புத்தகத்தைக் கொடுத்து தினமும் இதை படித்துவா என்று கூறிவிட்டுச் சென்று விட்டார். சுவாமிகளும் அப்போதிலிருந்தே குமாரஸ்தவத்தை



படிக்க ஆரம்பித்திருக்கின்றார்.

ஆச்சரியப்படத்தக்க வகையில் ஒவ்வொரு நிமிடத்திற்கும் அவரது உடல்நலன் மேம்பட்டிருக்கின்றது. மருத்துவர்கள் அறுவைசிகிச்சைக்கு குறித்த நாளுக்குள்ளாக சுவாமி கள் பரிபூரணமாக குணம் அடைந்தி

ருக்கின்றார். சுவாமிகளின் உடல் நிலையை கவனித்த மருத்துவர்கள் மிகவும் ஆச்சர்யம் அடைந்து அவர் பூரண உடல் நலத்துடன் இருப்பதாகவும், அவருக்கு அறுவை சிகிச்சை தேவையில்லை என்றும் கூறினர்.

சுவாமிகள் ஆச்சர்யத்துடன் தனக்கு குமாரஸ்தவத்தை படிக்கச் சொன்ன அந்த மனிதரை மருத்துவமனை முழுக்க தேடிபார்த்திருக்கின்றார். அவர் எங்குமே தென்படவில்லை. பிறகு மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பினார்.

ஒரு சமயம் திருவான்மியூரில் உள்ள பாம்பன் சுவாமிகளின் ஆலயத்திற்கு சென்ற போது அங்கு தன்னை "குமாரஸ்தவம்" படிக்கச்சொன்ன பெரியவரின் புகைப்படம் இருந்ததைக் கண்டு ஆச்சர்யம் அடைந்த சுவாமிகள் அங்கிருந்தவர்களிடம் அவர் யார் என்று விசாரிக்க, அங்கிருந்த பக்தர்கள் இவர்தான் மகான் ஸ்ரீ பாம்பன் சுவாமிகள் என்று கூறியிருக்கின்றனர்.

உடனே நமது சுவாமிகள், ஸ்ரீ பாம்பன் சுவாமிகளைப் பற்றி முழுவதும் அறிந்து கொண்டு, தான் உடலை துறந்துவிட்ட போதிலும், நோய்வாய்ப்பட்ட ஒரு மனிதனுக்கு உதவ மனித உடலெடுத்து நேரில் வந்து குமாரஸ்தவம் படிக்கச் செய்து பூரணமாக குணப்படுத்திய மகானுக்கு சேவை செய்வதே எனது பணி என்று தான் அதுவரை பார்த்து வந்த அரசு பணியை துறந்து, முழுநேரமும் ஸ்ரீ பாம்பன் சுவாமிகளுக்கு தொண்டு செய்து வந்தார்.


சுமார் 20 வருடங்களாக ஸ்ரீ பாம்பன் சுவாமிகளின் சீவபீடத்தில் பௌர்ணமி பூஜை செய்து வந்தார்.



தவத்தின் வலிமையால் இறையருள் பெற்று தன்னை நாடி வந்தவர்களுக்கு, அவர்களின் குறைகளைப்போக்கி நல்லாசிகளை வழங்கிவந்தார்.

தமிழகத்தில் பல ஆலயங்களில் "குமாரஸ்தவம்" கல்வெட்டுக்களை நிறுவி இருக்கின்றார். வேலூர் மகாதேவ மலையில் வேல் அமைத்துக் கொடுத்திருக்கிறார். பல மகானகளிடத்தும், சித்தர்களிடத்தும் பல கலைகளை கற்று அதன்மூலம் பக்தர்களுக்கு அநேக நன்மைகளை செய்து வந்தார்.

கடுமையான தவப்பயனின் பலனாக முருகப்பெருமானை குழந்தைவடிவில் தரிசித்து இருக்கிறார். ஸ்ரீ பாம்பன் சுவாமிகளிடம் மானசீகமாக உரையாடும் சக்தியை பெற்றிருந்தார். அதன் மூலம் பாம்பன் சுவாமிகளின் வெளிவரதாக பல பாடல்களை வெளிப்படுத்தியிருக்கின்றார்.



பீடம், தேர்பவனி தெரு, வட நெம்மேலி,

திருப்போரூர் ஒன்றியம்.

செங்கல்பட்டு மாவட்டம்.

<u>பேரூந்து மார்க்கம்:</u>

சென்னை கோயம்பேடு <u>to</u> மகாபலிபுரம் இறங்குமிடம்:

வட நெம்மேலி, இ.சி.ஆர்.

<u>சீவசமாதி ஆலய முகவரி:</u>

ஸ்ரீ ல ஸ்ரீ "குமாரஸ்தவம் இராமானுஜம் சுவாமிகள் சீவ

ஆழ்சித்தர்களின் சீவசமாதியை தரிசிப்போம் வாழ்வின் கர்மவினைகளை அழிப்போம்!

"ஸ்ரீ தத்த ஜெயந்தி

எல்லாம் சாயி! எல்லாமே சாயி! என முழு நம்பிக்கையுடன் பயணிக்கும் சாய் சொந்தங்களுக்கு, 26.12.23. புதன் கிழமை மார்கழிப் பௌர்ணமி அன்று நிகழ இருக்கும், ஸ்ரீ குரு தத்த ஜெயந்தி வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிகுந்த மகிழ்ச்சி!

அதீத குழப்பம், அதனால் மனக்கலக்கம் என்றெல்லாம் உணரப்படும் இம்மானிட வாழ்வில், கலியின் உச்ச கட்ட தாக்கத்தில் வாழும் நமக்கெல்லாம் கிடைத்த மாபெரும் ஆசிர்வாதமாக, ஸ்ரீ தத்த ஜெயந்தி கொண்டாடப்படுகிறது.

அளவற்ற கருணையினாலும் நம் எல்லா உயிர்களிடத்தும் அபரிமிதமான இரக்க குணத்துடன் நமக்கு நல்வாழ்வு வாழ வழிகாட்ட "இரட்டை அன்பளிப்பாக" இறைவனே 'குருவாக' அவதரித்துக் கொண்டு நம்மை கைப்பிடித்து ஆதரவுடன் வழிநடத்தி ஆன்மீக சாகரத்தில் நம்மை அமிழ்த்தி அமைதிப் பெருவெள்ளமாக நம்மை உருமாற்றம் செய்யும் சக்தியின் மறுபெயரே "ஸ்ரீ குரு தத்தாத்ரேயர்".

நம் அனைவருக்கும் பற்பல காலங்களில், வேறு வேறு இடங்களில் தன்னை உருமாற்றம் செய்து இன்றளவும் நமக்கு வழித்துணையாக வரும் சக்தியே ஸ்ரீ தத்தர்.

இப்பிரபஞ்சத்தின் அளவற்ற ஜோதி சொரூபத்தை நம் சிற்றறிவினால் எட்டமுடியாத காரணத்தால், ஒரு குணமற்ற உருவமில்லாத சக்தி தன்னை உருவகப்படுத்திக் கொண்டு நம்முடன் தொடர்பு கொள்வது கோடிக்கணக்கான தாயன்பை விட மாபெரும் கருணை அல்லவா?

அப்படிப்பட்ட ஸ்ரீ குருதேவர் தோற்றமே நம்மைப் பரவசத்துக்குள்ளாக்கும் மூன்று தலை, ஆறு கைகள், நான்கு நாய்



வடிவங்கள் மற்றும் ஒரு பசுமாடு சூழ அமைந்த உருவமாகும். மூன்று தலைகள் பிரம்மா, விஷ்ணு, சிவன், ஆறு கைகளில் சங்கு, சக்கரம், கதை, திரிசூலம், கமண்டலம், திருவோடு, நான்கு நாய்கள் ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்கள். பசுமாடு பூமித் தாயின் அளவற்ற கருணை வடிவம்.

இதன் உட்கருத்தாக விளங்குவது ஒரு மிகப் பெரிய தத்துவம். ஒருமுகப்பட்ட அத்வைத ஆன்மீக ஆத்மாக்களுக்கு மட்டுமே இதன் உண்மை ஓரளவுக்கு விளங்கும்.

சங்கு தெய்வீக ஒலி ஆன்ம அறிவை அளிக்கும். சக்கரம் காலத்தின் சங்கமம் (நல்ல+கெட்ட காலங்களை சமன் செய்யும்) கதை பெருமிதத்தின் உருவம் (அபரிமிதமான அன்பு+ இரக்கம்+கருணை) திரிசூலம் மூன்று வித சக்திகளின் சங்கமம் (கூர்மை + ஆழம்) கமண்டலம் பூவுலக வாழ்வின் அளவற்ற ஆதார சக்தியாக நீர் நிறைந்த பாத்திரம், திருவோடு அகங்காரம், தீய எண்ணங்கள், தற்பெருமை போன்ற எதிர்மறை சக்திகளை அகற்றும்.

இந்த அழகான அமைதியான உருவத்துடன் அன்னை அனசூயா மற்றும் அத்ரி மஹரிஷிக்கு ஆன்மீக உன்னத நிலையளிக்க, தன்னையே பரிசளித்த உருவம். 'தத்த' என்றால் அர்பணிப்பு. 'ஆத்ரேயர்' என்றால் அத்ரி வம்சமாக தன்னை அர்பணித்துக் கொண்டவர்.

இத்தகைய மும்மூர்த்திகளின் சங்கம சக்தியான 'ஸ்ரீ குரு தத்தர்' எனப்படும் ஆதி குரு, 24 விதமான அறிவுகளைப் பெற்றதாகவும், இப்பூவுலகத்தில் இன்றளவும் சுற்றித்திரிவதாகவும் நம்பப்படுகிறது.

இவ்வுலகத்து உயிர்கள் அனைத்தும் உன்னதமான சந்தோஷமான தர்மத்திற்குட்பட்ட வாழ்க்கை வாழ்ந்து ஆன்மீகத்தில் சங்கமிக்க அருள் புரியவும், வாழ்க்கை கல்வி கற்பிக்க வந்தவர் தான் ஸ்ரீ குரு தத்தர்.

அவரது அவதார தினத்தை நாடு முழுவதும் சிறப்புடன் கொண்டாடும் தினம் தான் மார்கழி பௌர்ணமி நாளான தத்தாத்ரேய ஜெயந்தி நன்னாள்.

இந்த நன்னாளில் மஹாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் ஒரு வார காலமாக பூஜை வழிபாடுகள், பஜனைகள், குருசரித்திரம், அவதூத கீதை, ஜீவன் முக்த கீதை பாராயணங்கள், தத்த ஹோமம், அன்னதானம் என தத்த சம்ப்ரதாய வழிபாடுகள் விமர்சையாக கொண்டாடப்படும்.

நாமும் இந்த நல்ல நாட்களை நமது ஆன்மீக சிந்தனை மற்றும் வழிபாட்டிற்கு அர்பணித்து, திருவருள் பெற வேண்டுகிறோம்.

குரு வாழ்க! குருவருள் வாழ்க!!

– சுந்தர் சாய்

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு.பாலகிருஷ்ணன்.அண்ணாநகர் ரூ.3000.
திரு.பேச்சிநாதன். மந்தைவெளி. ரூ.3000.
செல்வி. ஜி. அபர்ணா. வலங்கைமான். ரூ.3000.
திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.
திருமதி.பி. திருமலைச்செல்வி. கொளத்தூர். ரூ.1000.
திரு. தியாகராஜன். வேளச்சேரி.ரூ.501
திருமதி. சுமதி.வாழ்க வளமுடன். கொளத்தூர். ரூ.500
திருமதி. சாந்தி. மந்தைவெளி.ரூ.500
திருமதி.மகாலட்சுமி பொன்முருகன். மதுரை. ரூ.500.
திரு. சாய்கிருபா. வாடிப்பட்டி.ரூ.500
திருமதி.சுகன்யா மகேஷ்பிரபு. கொளத்தூர். ரூ.500

திருமதி.சரண்யா. கொளத்தூர். ரூ.500.
திருமதி.உமா மகேஸ்வரி. அயனாவரம். ரூ.500.
திரு.சரஸ்வதி கமலக்கண்ணன். வேப்பம்பட்டு. ரூ.500
திரு.கேஸ்வர். ஈரோடு.ரூ.500
திருமதி. ஜெயசாந்தி நாகமூர்த்தி. AYK. ரூ.500.
திருமதி.வரலட்சுமி பிரபாகரன். அயனாவரம்.ரூ.400.
திருமதி. பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.
திருமதி.லதாபாபு. வேப்பம்பட்டு. ரூ.300
திருமதி. பவித்ரா. கொளத்தூர்.ரூ.300.
திரு.வி.பலராமன். அயனாவரம்.ரூ.250.
திரு.கார்த்திகேயன். கதிர்.ரூ.200
திருமதி. ராணி திவாகர். சின்னாளபட்டி ரூ.200.
திருமதி.ஜெயந்தி தியாகராஜன் மாவுத்தன்பட்டி ரூ.200



திருமதி. உமா முருகன் சின்னாளபட்டி ரூ. 200
திரு.குமரன் ஸ்டோர் டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட். கொளத்தூர். ரூ.200.
திரு.எம்.திருக்கைவேல் கோகிலா. ஓசூர். ரூ.200.
திரு.வா.சூர்யகுமார்.கேபிள் டி.வி மாவுத்தன்பட்டி.150.
திரு.கணேஷ் கபே. வில்லிவாக்கம். ரூ.101.
திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.
திருமதி. பிச்சையம்மாள். பெரம்பூர். ரூ.100.
டாக்டர்.கார்த்திகா வர்ஷினி.ரூ.50
சரஸ்வதி நியூஸ் மார்ட். அகரம். ரூ.50.
திரு.அகஸ்டின் குடும்பத்தார். திருநீர்மலை. அரிசி 26 கி.
செல்வி. ரித்திகா லோகநாதன். அயனாவரம். அரிசி 26 கி

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* 5 வருச சந்தா - ரூ.1000 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திரு. சாய்கிருபா. வாடிப்பட்டி. ரூ.500.
திரு.ராஜசேகர். திரு.வி.க நகர். ரூ.500.
திருமதி.திலகம்.குரோம்பேட்டை. ரூ.320
திரு.பி. இந்துமதி.அயனாவரம். ரூ.250.
திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார். பெரம்பூர். ரூ.200.
திரு.வேணுகோபால்.நங்கநல்லூர். ரூ.100.
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன்.நங்கநல்லூர். ரூ.100.

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068